Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

C 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம். பிலவ ஆனி 14 ஆம் நாள் முஹர்ரம் 14 (28-6 61) புதன்கிழமை | இதழ் 115

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்-2. மதுரை

# நடுக்கடலில் பிடிபட்ட

## கள்ளப் படகு

## ரூ. 12,000 பெறுமான பொருட்கள் பறிமுதல்

### நால்வர் தப்பி மறைந்தனர்

**மாவிட்டபுரம், செவ்வாய்**

**இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக படகொன்றில் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் சுமார் ரூ. 12,000 பெறுமதியான விலை உயர்ந்த மின்சாரப் பொருட்களை ஊர்காவற்றுறை சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.**

இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக படகொன்றின் மூலம் எடுத்துச் செல்லப்பட்ட மின்சாரப் பொருட்களை ஊர்காவற்றுறை சுங்க இலாகாவைச் சேர்ந்த திரு. கே. பி. பெர்னண்டோ தலைமையில் சென்ற கோஷ்டி கைப்பற்றச் சென்ற சமயம், அப்படகில் சென்றதாகக் கூறப்படும் 4 நபர்கள் தப்பியோட முயற்சித்து கடலில் குதித்துவிட்டார்கள் என்றும், படகையும் படகிலிருந்த பொருட்களையும் அவர்கள் கைப்பற்றினர் என்றும் தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய வடமாகாண சுங்க இலாகா அதிகாரி திரு. கே. திருநாவுக்கரசு, கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் மின்சாரப் பொருட்களையும், அப்படகையும் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டார்.

## ஐ. நா. வில் சீனாவை: சேர்க்க அமெரிக்கா ஆதரவு!

### பிரிட்டனுக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்

வாஷிங்டன், ஜூன் 27

இவ்வாண்டு இலையுதிர் காலத்தில் சீனக் குடியரசை ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ள ஆதரவளிப்பது பற்றி அமெரிக்கா ஆராய்ந்து வருவதாய், அது பிரிட்டனுக்குத் தெரிவித்திருக்கிறதாம்.

அதே சமயம் சியாங்கை ஷேக்கின் தேசிய சீனவும் ஐ. நா. வில் இருக்கவேண்டும் என்றும், பாதுகாப்பு சபையில் அதற்கு வழக்கம்போல் ரத்து அதிகாரம் இருக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் யோசனைஎனக் கூறப்படுகிறது.

### கிழக்கு நைஜீரிய பிரதமர்

**இன்று இலங்கை வருகிறார்**

கொழும்பு, செவ்வாய்

கிழக்கு நைஜீரியப் பிரதம மந்திரி டாக்டர் மைகேல் ஐ. ஒக்புரா நாளை இலங்கைக்கு விஜயம் செய்வார். இவர் இங்கு ஜூலை 3-ம் திகதிவரை தங்கியிருப்பாரெனத் தெரிகிறது.

டாக்டர் மைகேலுடன் கிழக்கு நைஜீரிய வர்த்தக மந்திரி திரு. ஜே. யு. நூடு, பிரதம காரியதரிசி, திரு ஜே. கே. இடோஜி ஆகியோர் வருகின்றனர்.

இவர்கள் இங்கு கவர்னர் ஜெனரல், பிரதமமந்திரி, மற்றும் மந்திரிகளையும் சந்திப்பார்கள்,

### இந்திய தூதுகோஷ்டி

எண்ணை உற்பத்தி சம்பந்தமாய் ஆராய்வதற்காக இந்திய தூதுகோஷ்டி ஒன்று ரஷ்யாவுக்கும், செக்கோஸ்லேவேகியாவுக்கும் விஜயம்செய்யவிருக்கிறது.

### ஸ்ரீமதி லக்ஷா சரண் தெரிவு

சமீபத்தில் ராஜினாமாச் செய்த ஸ்ரீமதி துர்க்காபாய் தேஷ்முக்கின் ஸ்தானத்திற்கு டில்லியைச்சேர்ந்த சமூக ஊழியர் ஸ்ரீமதி லக்ஷா சரண் மாதர்கல்விக்கான தேசிய சபைத்தலைவராய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## தாணுப்பிள்ளை மீது நம்பிக்கையில்லா தீர்மானம்

### கேரள சட்டசபை இன்று விவாதிக்கும்

திருவனந்தபுரம், ஜூன் 27

கேரள முதன் மந்திரி திரு. பட்டம்தாணுப்பிள்ளைமீது நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை பிரஜா சோஷலிஷ்ட் அங்கத்தினர் ஸ்ரீஜனார்த்தனன் கொண்டுவந்துள்ளார். நாளை இதுபற்றி சபை விவாதிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இத் தீர்மானத்திற்கு கம்யூனிஸ்டுகள் ஆதரவளிப்பதாய்க் கூறப்படுகிறது.

### ரஷ்யகப்பலை அமெரிக்கா தாக்கியது

மாஸ்கோ, ஜூன் 27

கியூபாவுக்கு சாமான்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த ஒரு ரஷ்யக்கப்பல்மீது அமெரிக்கவிமானம் ஒன்று குண்டு வீசியதாய் ரஷ்யா புகார் செய்துள்ளது.

## மலாயா இந்தியர் மீது பாரபட்ச கட்டுப்பாடில்லை

### திரு. கே. சந்தானம் கருத்து

சென்னை, ஜூன் 27

மலாயா இந்தியர் மீது பாரபட்சமான கட்டுப்பாடுகள் இல்லையென அங்கு 2 மாதம் சுற்றுப்பிரயணம் செய்துவிட்டுத் திரும்பிய திரு. கே. சந்தானம் கூறினார்.

ஆனால் புதிதாக அங்கு குடியேறுபவர்களுக்கு மட்டுமே கடும் கட்டுப்பாடு இருப்பதாய் அவர் தெரிவித்தார்-

மலாயா ரப்பர் தோட்டங்களில் ஒரு தொழிலாளி ஒரு நாளைக்குக் குறைந்தது 5 ரூபாய் சம்பாதிக்கிறார் என்றும், பிரஜா உரிமைக்குத் தகுதிபெற்ற மலாயா இந்தியர்கள் முறைப்படி அவற்றைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

### மக்கள்வங்கி ஜூலை 1ல் இயங்கும்

கொழும்பு, செவ்வாய்

ஜூலை 1ம் திகதி முதல் மக்கள் வங்கி வேலைசெய்ய ஆரம்பிக்கும் என வர்த்தக' கப்பற் போக்குவரத்துமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன அறிவித்தார். இது சம்பந்தமாக நேற்றிரவு விசேஷ வர்த்தகமானி ஒன்று வெளியிடப்பட்டது.

## "மொழி அடிப்படையில் பிளவுபட்டால் முன்னேற்றமில்லை"

### தோட்ட உத்தியோகஸ்தர் சங்க கூட்டத்தில் பேச்சு

கண்டி, செவ்வாய்

"எமது தாய் நாட்டின் சுபீட்சம் தான் எமது முக்கிய நோக்கமாக இன்று இருக்க வேண்டும். மொழி மற்றும் விஷயங்களின் அடிப்படையில் மக்கள் பிளவுபட்டு நிற்கும் வரை இந்த நோக்கம் பயனற்றதாகவே இருக்கும். மொழியும் இதர விஷயங்களும் நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு இரண்டாவதே" என்று இலங்கை தோட்ட உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு. டி' பி. கஸ்பே புஷ்பதான மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் 41 வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"தமிழர்களாக இருந்தாலும் பறங்கியர், முஸ்லிம்கள் அல்லது சிங்களவராக இருந்தாலும் சரி லங்கா மாதாவின் மக்கள் என்ற முறையில் தங்கள் வேற்றுமைகளை மறந்து நாட்டின் பொது நலனுக்கு உழைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது" என்று திரு கஸ்பே கூறினார்.

### லாவோஸ்: கம்போடியா யோசனை

ஜெனிவா, ஜூன் 27

லாவோஸில் நடுநிலைமையும் அமைதியும் ஏற்படுவதற்கான யோசனையை கம்போடியா வெளியிட்டிருக்கிறது. வருங்கால அரசாங்கம் நடுநிலைமைப் பிரகடனம் ஒன்றை வெளியிட வேண்டுமென அதில் யோசனை கூறப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக கம்போடிய அதிகாரிகள் 3 லாவோஸ் இளவரசர்களையும் சந்தித்துப் பேசினர்.

## கல்லோயா வேலை நேரத்தில் வீண் பொழுது போக்கிய 50 பேர்

### தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்

கல்லோயா, செவ்வாய்

வேலை நேரங்களில் வீண் பொழுது போக்கியதாக ஐம்பதிற்கு மேற்பட்ட கல்லோயா அபிவிருத்திச்சபைச் சிப்பந்திகள் உடனடியாக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். விவசாய காணி நீர்ப்பாசன இலாகாவின் தற்காலிக மந்திரி திரு. எம். தென்னக்கோன் கல்லோயாவைப் பார்வையிடச் சென்றபோது இவ்விதம் உத்தரவிட்டார். கல்லோயா வேலைகளில் திருத்தங்கள் செய்வதற்கு அரசாங்கம் திட்டங்கள் வகுத்துள்ளது. சபையினது வேலைகளை கிளைப்படுத்தி அமைக்க வேண்டும் என அரசாங்கம் தீர்மானம் கொண்டுள்ளது.

தற்காலிக மந்திரி திரு. எம். தென்னக்கோன் இலாகாப் பணியாளர்கள் சிலருடனும் கல்லோயாச் சபையைச சேர்ந்தவர்கள் சிலருடனும் கல்லோயா வேலைத்தளத்தையும் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிக்கூடத்தையும், நீர்ப்பாசன வேலைகளையும், கரும்புத் தோட்டங்களையும் பார்வையிட்டார். ஆற்றின் இடது பக்கத்திலுள்ள குடியேற்றங்களைப் பார்வையிடுகையில் கரும்புத் தோட்ட வேலையாளர்களில் முப்பது பேர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ய உத்தரவிட்டார். கொண்டவட்டுவன் ஏரியின் கரையோர வீதியில் உட்கார்ந்திருந்த மூவரைக் கண்டுவிட்டு அவர்களுக்கும் வேலை நீக்க உத்தரவளித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### விற்பனைக்கு

500 அலுமினியத் தகடுகள், பனை மரங்கள், நீப்பைகள், காட்டுத் தடிகள், 500 அலங்காரத்திற்கு ஏற்ற பல்புகள், "சோல்டேர்ஸ்" வயருடன் அதற்கேற்ற தேவையான சாமான்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: போன் 639. 221/3 கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் அல்லது பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காணிகள், வீடுகள் மற்றும் அசைவு, அசைவில்லாத பொருட்களை வாங்கவோ விற்கவோ விரும்பினலும் அல்லது ஆதனங்களின் பொறுப்போடு பணம் எடுக்கவோ, கொடுக்கவோ விரும்பினலும் தொடர்பு கொள்ளவும்: N. Arulanantham, Auctioneer & Broker, 34, Manipay Road, Jaffna.

### விற்பனைக்கு

பாவித்த "பெர்குஸன்" (Ferguson) மண்ணெண்ணெயில் இயங்கும் 'ட்ராக்டர்' (TRACTOR) டில்லர் (Tiller) டிஸ்க்குடன் நீண்ட இரும்புப் பல்லுடையதும் உழுவதற்கு ஏற்றபடி பாவிப்பதற்கும் நல்ல நிலைமையில் உள்ளது - விபரங்கட்கு: பெட்டி எண் × 22 c/o ஈழநாடு, த. பெ. எண். 49. யாழ்ப்பாணம்.




விளம்பரம் செய்க
வியாபாரம் பெருக


## கேள்விபற்றிய அறிவித்தல்

1961-ம் ஆண்டு ஆடி மாதம் 8-ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிவரை ஆனையிறவு நாவற் கொட்டியான் பாதைத் திருத்த வேலைக்குரிய சீல் வைத்த கேள்விகள் கரைச்சிக் கிராமச் சங்க அக்கிராசனரால் ஏற்கப்படும்.

2. கேள்விகள் இக்கந்தோரிலுள்ள கேள்விப் பெட்டியில் அல்லது பதிவுத் தபால்மூலம் அல்லது 8-7-61-ந் திகதி காலை 9-30 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

3. கேள்விப்பத்திரப் பிணை ரூபா 25-00 இக் கந்தோரில் கட்டியதும் இக் கந்தோரால் வழங்கப்படும் பத்திரங்களில் 8-7-61-ந் திகதி காலை 9-30 மணிக்குப் பிந்தாமல் அனுப்பப்படவேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 6-7-61-ந் திகதி மாலை 4 மணி வரை வழங்கப்படும்.

5. சகல அழிப்புகள் மாற்றங்கள் யாவும் முதலெழுத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. கேள்வித் தொகையை ஏற்றுக் கொண்டதாய் அக்கிராசனரால் அறிவிக்கப்பட்ட இரு வாரங்களுள் பிணைப் பணம் செலுத்தி ஒப்பந்தம் எழுதி வேலையை ஆரம்பிக்க வேண்டும். தவறின் கட்டுப் பணம் திருப்பிக் கொடுபட மாட்டாது.

அ. க. பொன்னம்பலம்,
அக்கிராசனர்.

கரைச்சிக் கிராமச் சங்க
காரியாலயம்,
கிளிநொச்சி.
திகதி 23-6-61.


### தேவை

ஆங்கிலத்திலும், தமிழிலும் டைப் அடிக்கக் கூடிய ஒருவர் தேவை. காமர்ஸ் இன்ஸ்டிட்யூட் பரீட்சையில் தேறியிருக்க வேண்டும். சுருக்கெழுத்து தெரிந்திருந்தால் நல்லது. 30 வயதுக்குக் குறைவானவர் சொந்தக் கையெழுத்தில் நற்சாட்சி விபரங்களுடன் விண்ணப்பிக்க:- "ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம்.


## மலர் வெளியீட்டு விழாவில்
### எழுத்தாளர் கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாச மலர் வெளியீட்டுவிழா ஜூலை மாதம் 8-ந் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவுக்கு சமாசத் தலைவர் கேட் முதலியார் சி. தியாகராசா தலைமை வகிப்பார்.

மலர் வெளியீட்டு விழாவின் போது எழுத்தாளர் கருத்தரங்கம் ஒன்று நடைபெற ஏற்படுவதாகத் தெரிகிறது. "ஈழத்து எழுத்தாளர் கூட்டுறவு சமூக வளர்ச்சிக்குப் பயன்படுமா" என்ற விஷயம் பற்றிய இக் கருத்தரங்கில் திருவாளர்கள் கனக. செந்திநாதன், சே. கைலாசபதி, சி. வி. வேலுப்பிள்ளை, அன்ரன்சில், உருத்திரா கந்தசாமி ஆகியோரும் முஸ்லிம் பெண்மணியொருவரும் கலந்து கொள்வார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

சமாசவிழாப் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுகதை எழுத்தாளர்களுக்கும் விளையாட்டுப் பேச்சுப்போட்டி, திருக்குறள் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் இவ்வைபவத்தின் போது பரிசில்கள் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

# வெளிநாட்டில் குடியேறவிரும்பும் அரசாங்க ஊழியர்
## அமைச்சுடன் ஆலோசனை செய்தபின்னரே அனுமதி

கொழும்பு, செவ்வாய்

வெளிநாட்டில் குடியேற விரும்பும் அரசாங்க ஊழியர் எவருக்கும், அவர் கடமையாற்றிய அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னரே குடியேற்ற வெளியேற்ற நாட்டிலாகா இனி பாஸ்போர்ட் வழங்கும்.

தொழில் நுட்ப நிபுணர்கள் இலங்கையை விட்டுவெளிநாடுகளில் சென்று குடியேறி வருவதால் தொழில் நுட்ப நிபுணர்களுக்காகவே இந்த புதிய உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப நிபுணர்கள் பெருந்தொகையானோர் இலங்கையைவிட்டு வெளிநாடுகளில் சென்று குடியேறுவது பற்றி அரசாங்கத்துக்குத் தெரியுமாவென்றும் இது சம்பந்தமாக அரசாங்கம் ஆராயுமாவென்றும் சமீபத்தில் செனட் சபையில் செனட்டர் ரெஜி பெரேரா கேட்டதும் இவ்விஷயம் பற்றி தாம் பிரதமரின் கவனத்துக்குக்கொண்டுவருவதாக செனட்டர் ஏ. பி. ஜயசூரியா தெரிவித்ததும் வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

## ஜாஎலவில் 20 கைத்தொழிற்சாலைகள்

ஜாஎல, திங்கள்

ஜாஎலவில் உள்ள தோட்டத்தில் 20 சிறு கைத்தொழிற்சாலைகள் நிறுவப்படுமெனத் தெரிகிறது.

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் 500 பேருக்கு இந்தத் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்குமென்று தோட்டக் கைத்தொழில் கார்ப்பரேஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இங்குள்ள 70 ஏக்கர் தோட்டத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து 25 ஏக்கர் கொண்ட நிலத்தை பராமரிப்பு அலுவல்களுக்காகவும் மற்றப்பகுதிகளைக் கைத்தொழில் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்த அரசாங்கம் ஆலோசனை செய்துள்ளது.

இப்புதிய கார்ப்பரேஷனுக்கு கைத்தொழில் உள்நாட்டு கலாச்சார மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா அனுப்பியுள்ள செய்தியில் ஜாஎலவில் நிறுவவிருக்கும் தோட்டக் கைத்தொழிற்சாலை இலங்கையிலேயே புதியமுறையில் அமையும் ஒரு கைத்தொழிற்சாலையாக இருக்கும் என்றும் கிராம அபிவிருத்தியில் இது பெரிதும் உதவுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஸ்ரீ சிதம்பரம்
### சென்னை கிரிக்கெட் சங்க தலைவர்

சென்னை, ஜூன் 26

சென்னை கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக திரு. எம். ஏ. சிதம்பரம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஸ்ரீ பட்டாபி ராமன் உட்பட பலர் உபதலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## 51 மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி
### அவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்திலிருந்து கடந்த 18 மாதக் காலத்தில் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு 51 மாணவர்கள் வெளியேறியிருக்கின்றனர். இவர்களில் 27 பேர் தச்சுத்தொழிலில் பயிற்சி பெற்றவர்கள். 24 பேர் மேசன் வேலையில் பயிற்சி பெற்று வெளியேறியவர்கள். இவர்களில் பலருக்கு அரசாங்கத்தில் வேலையும் கிடைத்துள்ளது.

## குதிரைப்பந்தய செய்தித் தடை
### உள்நாட்டமைச்சு நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

குதிரைப்பந்தய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரக் கூடாது என்னும் சட்டத்துடன் நாடு முற்றிலும் சட்ட விரோதமாக குதிரைகள் மீது பணம் கட்டுவதையும் தடை செய்ய கைத்தொழில், உள்நாட்டு, கலாச்சார அமைச்சு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

இதுவிஷயத்தில் கலாச்சார அமைச்சு பொலிஸாரின் உதவியை நாடியுள்ளது.

குதிரைப்பந்தயம் சம்பந்தமான செய்தியைப் பிரசுரிக்கும் எவரையும் உடனே கைது செய்யும்படி பொலிஸாருக்கு அமைச்சு அறிவித்துள்ளது.

சுங்க இலாகா அதிகாரிக்கு உள்நாட்டமைச்சு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குதிரைப்பந்தயம் சம்பந்தமான உள்ளூர், வெளியூர் பிரசுரங்களைத் தடைசெய்யும் சட்டம் அமுலில் இருப்பதாகவும் இதன்படி செயலாற்ற வேண்டுமென்றும் அறிவித்துள்ளது.

## நீலகண்டத்தை வெற்றிகண்ட கோஷ்டி

புதுடில்லி, ஜூன் 27

21,640 அடி உயரமுள்ள நீலகண்ட மலைச்சிகரத்தை இந்திய மலை ஏறிகள் கோஷ்டி ஒன்று காப்டன் குமார் தலைமையில் வெற்றிகண்டது. டில்லி ரயில் நிலையத்தில் காப்டன் குமாருக்கும் அவரது கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கும் பொது வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாரதநாட்டில் தயாரிக்கப்பட்ட சாதனங்கள் மலைஏறும் போது நன்ருகத் தாக்குப் பிடித்தன என்று காப்டன் குமார் தெரிவித்தார். மலை உச்சியை அடைவதற்குமுன் நான்கு இரவுகள் காப்டன் குமார் கோஷ்டியினர் நித்திரையில்லாமல் இருந்தனர்.

கோஷ்டியைச் சேர்ந்த சிலர் இன்னும் டில்லி வந்து சேரவில்லை. அவர்கள் மலை ஏறுவதற்குப் பயன்பட்ட மூட்டை முடிச்சுகளை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## பல்கலைக் கழக நூற்றுண்டுவிழா கட்டடம்

சென்னை, ஜூன் 26

சென்னை பல்கலைக் கழகத்தின் நூற்றுண்டுவிழாக் கட்டடத்தை ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி உபஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் திறந்து வைப்பார்.

## "விவேகமான செயலல்ல !"
### விமலவன்ச தேரோ கூறுகிறார்

கொழும்பு, செவ்வாய்

"பௌத்த மத பீட விவகாரங்களிலும் பௌத்த சாஸன விவகாரங்களிலும் பார்லிமெண்டில் ஒரு சட்டம் இயற்றுவதன்மூலம், பௌத்த அரசாங்கம் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு அரசாங்கம் தலையிடுவது விவேகமான செயலல்ல" என்று ஸ்ரீலங்கா வித்தியாலய அதிபர் பண்டித பத்தேகம விமலவன்ச தேரோ கூறினார்.

மருதானை அபயசிங்கராம விகாரையில் சங்கராஜ ஞாயிறு பாடசாலை பரிசளிப்பு விழாவில் விமலவன்ச தேரோ பேசினார்.

பௌத்த மத பீடம் சம்பந்தமாக இப்பொழுது பலர் அக்கறை காட்டுவதாகவும் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த நிலையைவிட பௌத்தமதபீடம் பல கஷ்டங்களை இன்று எதிர் நோக்கவேண்டியுள்ளதென்றும் விமலவன்ச தேரோ கூறினார்.

## மாநகரசபை ஊழியர்
### தற்காலிக வேலைநிறுத்தம் விசாரணை நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையில் தண்ணீர் விநியோகப் பகுதியில் ஊழியராகக் கடமையாற்றிய திரு. அல்பிரட் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. அல்பிரட் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி மாநகரசபைக் கமிஷனரும் வேலைப்பகுதி என்ஜினியரும் விசாரணை செய்து வருகின்றனர்.

## டாக்டர் வன்னியசேகரம் தலைவராகத் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இணைப்புக்கமிட்டிக் கூட்டம் சென்ற சனிக்கிழமை நடைபெற்றபோது அதன் தலைவராக டாக்டர் வன்னியசேகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பெரியாஸ்பத்திரி அத்தியாவசிய சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அங்கு ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## யூ. என். பி. தொழிற் சங்கம்
### அங்கீகாரமில்லை

கொழும்பு, செவ்வாய்

யூ. என். பி. யின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய தொழிலாளர் சங்கத்தை அங்கீகரிக்க இலங்கை போக்குவரத்துச் சபை மறுத்துவிட்டது.

அங்கீகாரம் கோரி மனுச் செய்யும் எந்த யூனியனாக இருந்தாலும் 40 சதவீத தொழிலாளர்களுக்கு மேல் அந்த யூனியனில் அங்கம் வகித்தாலே இனி அங்கீகரிப்பதென்று சபை முடிவு செய்துள்ளது.

---

புதுடில்லி, ஜூன் 27

ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. டாக் ஹமர் ஷீல்ட் அடுத்த மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்.

ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் சமூக பொருளாதார மகாநாட்டில் கலந்து கொண்ட பின் திரு. ஹமர் ஷீல்ட் இந்தியாவுக்கு வருவார்.

இந்தியா வரும் வழியில் கெய்ரோவிலும் திரு. ஹமர் ஷீல்ட் தங்குவார்.

# குவாய்த்-"அது எங்கள் பிரதேசம்"

## ஈராக்கிற்கு சாவூதி அரேபியா பதில்

லண்டன், ஜூன் 27

**குவாய்த் ராஜ்யம் சாவூதி அரேபியாவின் ஒரு பகுதியென்றும் அதன்மீது நடத்தும் தாக்குதல் எதுவும் சாவூதி அரேபியா மீது நடத்தப்படும் தாக்குதலாகவே கருதப்படுமென்றும் சாவூதி அரேபிய மன்னர் சாவூத் அறிவித்துள்ளார்.**

குவாய்த் ராஜ்யம் ஈராக்கைச் சேர்ந்தது என்று ஈராக் பிரதமர் ஜெனரல் காசிம் நேற்று முன்தினம் அறிவித்தது வாசகநேயர்களுக்கு நினைவிருக்கும்.

பிரிட்டிஷ் பாதுகாப்பிலிருந்த எண்ணெய் வளம் மிகுந்த குவாய்த் ராஜ்யம் சமீபத்தில் பூரண சுதந்திரமடைந்தது.

குவாய்த் ராஜ்யம் ஈராக்கைச் சேர்ந்ததென்றும் ஈராக்கையும் குவாய்த்தையும் பிரிக்கும் இயற்கை எல்லையெதுவும் கிடையாதென்றும் 1889ம் வருடத்தில் குவாய்த் மன்னர் பிரிட்டனுடன்செய்து கொண்ட ஒப்பந்தம் செல்லுபடியாகாதென்றும் ஈராக் பிரதமர் ஜெனரல் காசிம் அறிவித்ததுடன் குவாய்த் ராஜ்யத்தை ஈராக்குடன் இணைப்பதற்கு முதலில் சமாதானமான முறையில் முயற்சி செய்யப்படுமென்றும் அவர் கூறியிருந்தார்.

### குவாய்த் ரேடியோ அறிக்கை

குவாய்த் ராஜ்யம் தனது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவே விரும்புகிறதென்றும் சமாதானத்தை விரும்பும் நாடுகள் குறிப்பாக சகோதர அரபு நாடுகள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள உதவியளிக்குமென்று நம்புவதாகவும் குவாய்த் வானொலி அறிவித்தது.

குவாய்த் மீது ஈராக் உரிமை பாராட்டி விடுத்த அறிக்கையை குவாய்த் அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் நிராகரித்துவிட்டன.

குவாய்த் மீது ஈராக் பிரதமர் உரிமை பாராட்டியது சம்பந்தமாக சாவூதி அரேபிய மந்திரிசபை அவசரமாகக்கூடி ஆலோசனை செய்தது.

குவாய்த் ராஜ்யத்துக்கு ஏற்படக்கூடிய எந்த அபாயத்தையும் எதிர்த்துச் சமாளிப்பதற்கு சாவூதி அரேபியா தயாராக இருக்கிறதென்றும் மன்னர் சாவூத் அறிவித்தார்.

குவாய்த் மீது நடத்தப்படும் தாக்குதல் எதுவும் சாவூதி அரேபியா மீது நடத்தப்படும் தாக்குதலாகவே கருதப்படுமென்று ஈராக் அரசாங்கத்திடம் தெரிவிக்குமாறு பாக்தாத்திலுள்ள சாவூதி அரேபிய ஸ்தானிகருக்கு சாவூதி அரேபிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

### ஈரான் தலையிடாது

குவாய்த் ராஜ்யத்துடன் ஈரான் அரசாங்கம் ராஜீயத தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுமென்று ஈரான் அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனல் ஈராக் - குவாய்த் உரிமைப் பிரச்சினையில் ஈரான் தலையிடாதென்றும் ஈரான் அறிவித்துள்ளது.

குவாய்த் ராஜ்யத்தின் மீது ஈராக் உரிமை பாராட்டியிருப்பது சம்பந்தமாக லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனும் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபுவும் பேச்சுவார்த்தை நடத்தினர்

லெபனனிலுள்ள ஈராக் ஸ்தானிகருடன் லெபனன் பிரதமர் குவாய்த் ராஜ்யம் சப்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

குவாய்த் ராஜ்யம் பூரண சுதந்திரமடைய வேண்டுமென்று கோரியும் ஈராக் உரிமை பாராட்டுவதை எதிர்த்தும் குவாய்த்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன.

ஈராக் உரிமை பாராட்டி யுள்ளதைத் தொடர்ந்து குவாய்த்தில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## அணுகுண்டு எதிர்ப்பாளர்

### தேவாலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்

லண்டன், ஜூன் 26

வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தின் பீடத்தில் உட்கார்ந்திருந்த ஜேம்ஸ் ஏர்னஸ்ட் செக்கல்டன் (வயது 38) என்பவரை மூன்று பாதிரிகளும், ஒரு பொலிஸாரும்தூக்கிச்சென்று வெளியேற்றினர்கள்.

ஜேம்ஸுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு ஜூன் 23-ம் திகதி லண்டன் கோர்ட் ஒன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர் நீதிபதியைப் பார்த்துக் கீழ்க் கண்டவாறு கூறினர்:-

நான் அணுகுண்டுக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிப்பதற்காக உயர் பீடத்தில் ஏறியிருந்தேன். அணுகுண்டு கிறிஸ்துவுக்கும், எங்கள் எல்லோருக்கும் அவமானம் தரும் விஷயம்".

நீதிபதி உடனடியாக அவரை விடுதலை செய்தார்.

---

லாவோஸ்-

# அமெரிக்க-பிரஞ்சு திட்டம்: சீன நிராகரிப்பு

## சீனமீது அமெரிக்கா குற்றச்சாட்டு

ஜெனிவா, ஜூன் 27

லாவோஸை நடுநிலைமை நாடாக்குவது சம்சந்தமாகவும் லாவோஸுக்கான கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு அதிக அதிகாரம் வழங்குவது பற்றியும் பிரான்ஸும் அமெரிக்காவும் ஜெனிவா மாகாநாட்டில் சமர்ப்பித்த 22 அம்சத் திட்டத்தை நவசீன வெளிவிவகார மந்திரி மார்ஷல் சென்-யி நிராகரித்துவிட்டார்.

சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு அதிக அதிகாரம் வழங்கும் திட்டத்தின் மூலம் தென்கிழக்காகிய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனத்தை மேலும் லாவோசில் வைத்திருக்க அமெரிக்கா முயற்சி செய்வதாக மார்ஷல் சென்-யி குற்றம் சாட்டினர். இந்த முயற்சி இந்தோசீன முழுவதிலும் குழப்பத்தை உண்டாக்கும் என்று சீன வெளிவிவகார மந்திரி கூறினர்.

"லாவோஸ் சண்டை அதன் சொந்த விவகாரம். அங்கு அமைதியும் சமாதானமும் தானகவே ஏற்பட்டுவிடும். இதில் வெளியார் தலையீடு தேவையில்லை" என்று மார்ஷல் சென்-யி தெரிவித்தார்.

லாவோஸின் சுதந்திரத்துக்கும் நடுநிலைமை அந்தஸ்துக்கும் ஜெனிவா மகாநாடு உத்தரவாதமளிக்க வேண்டியது அவசியமென்றும் அவர் குறிப்பிட்டார்.

'சியாட்டோ' எனப்படும் தென்கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனம் கலைக்கப்பட வேண்டுமென்றும் லாவோஸ் விஷயத்தில் தலையிடுவதில்லையென்று மேற்கு நாடுகள் உறுதியளிக்க வேண்டுமென்றும் மார்ஷல் சென்-யி கூறினர்.

### அமெரிக்க பிரதிநிதி கருத்து

மார்ஷல் சென்-யியின்பேச்சு பற்றி அமெரிக்க பிரதிநிதியொருவர் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் லாவோஸைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து லாவோஸ் வாயிலாகத் தென்கிழக்காசியாவுக்குள் கால்வைத்துவிட சீன முயற்சி செய்கிறதென்றுர்.

### மன்னரைச் சந்திப்பார்

லாவோஸின் மூன்று இளவரசர்களும் லாவோஸ் மன்னர் சவன்னவத்தனவை மன்னர் தலைநகரான லுவாங்பிரபாங்கில் சந்தித்துப் பேசுவது நல்லதென்று வலதுசாரித் தலைவர் இளவரசர் பூன்ஊம் தெரிவித்தார்.

சூரிச்சில் முத்தலைவர்களும சந்தித்துப் பேசியது தமக்குத் திருப்தியளித்திருப்பதாகவும் இளவரசர் பூன்ஊம் தெரிவித்தார்.

மன்னர் சவன்னவத்தனவை தாம் சந்திக்க விருப்பதாகவும் இளவரசர் பூன்ஊம் கூறினர்.

ஜெனிவா மகாநாட்டுக் கூட்டுத் தலைவர்களான ரஷ்யப் பிரதிநிதி புஷ்கினும் பிரிட்டிஷ் பிரதிநிதி மால்கம் மக்டனல்டும் நேற்றுத் தனியாகச் சந்தித்துப் பேசினர்.

லாவோஸிலுள்ள கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு தொழில் நுட்ப சாதனங்கள் அனுப்புவது சம்பந்தமாக அவர்கள் பேசியதாகத் தெரிகிறது.

### மேனன் பிரயாணம் ரத்து

ஜெனிவா மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுப் புதுடில்லியிலிருந்து பம்பாய்க்குச் சென்ற இந்திய பாதுகாப்பு மந்திரியும் இந்தியத் தலைமைப் பிரதிநிதியுமான திரு. வி. கே. மேனன் தமது பிரயாணத்தைக் கடைசி நேரத்தில் ரத்துச் செய்து கொண்டார். அடுத்த சனிக்கிழமை அவர் ஜெனிவாவுக்குப் பிரயாணமாவாரென்று தெரிகிறது.

---

# இலங்கை-சீனத் தொடர்புகள்: பிரிட்டிஷ் நூலாசிரியர் கருத்து

சென்னை ஜூன் 27

இலங்கைக்கும் சீனவுக்குமிடையேயுள்ள வரலாற்றுத் தொடர்புகள் பற்றிப் பிரித்தானிய நூலாசிரியர் திரு. வில்லியம் வில்லெற்ஸ் என்பவர் தென்னிந்தியாவின் புதைபொருள் ஆராய்ச்சி சங்கத்தின் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார். இலங்கை - சீனத் தொடர்புகள் பற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ள திரு. வில்லெற்ஸ் கி. பி. நான்காம் நூற்றூண்டுக்கு முன்னதாக இலங்கைக்கும் சீனவுக்கு மிடையே உத்தியோக பூர்வமான தொடர்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "கி. பி. 405 இல்தான் முதன்முதலாகக் கலாச்சார்த் தொடர்பு ஏற்பட்டதெனலாம். இந்து சமுத்திரத்தில் இலங்கையின் ஸ்தானம் கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையே கடல் மார்க்கமாக நடைபெற்ற வாணிபத்திற்கு உதவியாக இருந்தது இதன்பயனக சீனவுக்கும் இலங்கைக்கும் ஆதியில் தொடர்பு ஏற்பட்டது. அத்தோடு புத்தசமயக் கொள்கைகளும் நம்பிக்கைகளும் பரவி இரு நாடுகளுக்கு மிடையே தொடர்பை உண்டாக்கின.

கி. பி. ஐந்தாம் நூற்றூண்டு தொடக்கம் இரு நாடுகளுக்கு மிடையே தொடர்புகள் வளர்ந்து வந்துள்ளன. எட்டாம் நூற்றூண்டின் நடுப்பகுதிக்குப் பின், நான்கு நூற்றூடுகள் வரை இரண்டு நாடுகளுக்குமிடையே எதுவிதமான தொடர்புகளும் இருக்கவில்லை. இக்கால கட்டத்தில் சீனவில் ஏற்பட்ட குழப்பமான அரசியல் நிலையே இதற்குக் காரணம் எனலாம்.

திரு. கே. ஏ. நீலகண்டசாஸ்திரியின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

---

## கிராமத்தில் தீ விபத்து

சென்னை, ஜூன் 26

தமிழ்நாட்டில் சோழவந்தான் என்ற கிராமத்தில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாய், 29 குடிசைகள் எரிந்தன. ரூ. 11,300 க்கு நஷ்டம். 3 பேருக்கு எரிகாயம் ஏற்பட்டது.

---

## கிழக்கு ஜேர்மனிக்கு ரஷ்ய பிரதமர் கடிதம்

மாஸ்கோ, ஜூன் 27

ஜேர்மனி சம்பந்தமாக இவ் வருட முடிவுக்குள் சமாதான ஒப்பந்தமொன்று ஏற்படுவதற்கு சோவியத் யூனியன் தன்னலான சகல முயற்சிகளையும் செய்யுமென்று சோவியத் பிரதமர் குருஷேவ் கிழக்கு ஜேர்மன் பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் சம்பந்தமாக மேற்கு நாடுகளும் சோவியத் யூனியனும் சமாதான ஒப்பந்தமொன்று செய்துகொள்ள வேண்டுமென்றும் இதற்கு மேற்கு நாடுகள் இணங்காவிட்டால் சோவியத் யூனியன் கிழக்கு ஜேர்மனியுடன் தனியாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்றும் திரு. குருஷேவ் சில தினங்களாகத் தெரிவித்துவருகிறர்.

---

## மேற்கு ஜேர்மன் திரைப்பட விழா

### ராவல்பிண்டியில் ஆரம்பம்

ராவல்பிண்டி, ஜூன் 27

மேற்கு ஜேர்மன் திரைப்பட விழாவொன்று நேற்று ராவல்பிண்டியில் ஆரம்பமானது. பாகிஸ்தான் கலாசார மந்திரி ஜனப் ஹபீப் ரகுமான் இவ்விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பாகிஸ்தான் திரைப்படத் தயாரிப்பாளர்கள் உயர்ந்த தரமுள்ள சினிமாப் படங்களைத் தயாரித்து வெளிநாடுகளில் பாகிஸ்தானின் கலாசாரத்தை பரப்ப வேண்டுமென்று கூறினர்.

ஒருவார காலம் நடைபெறவிருக்கும் இத்திரைப்பட விழாவின் மூலம் கிடைக்கும் வருவாய் பாகிஸ்தானில் தர்மச் செலவுக்குப் பயன்படுத்தப்படும்.

---

## தற்காலிக வேலைநீக்கம்

### போர்ட்டர் நடத்தைபற்றி புகார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தைச் சேர்ந்த திரு. கந்தவேள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படடுள்ளார். அங்கு வேலைசெய்யும் மற்றெரு போர்ட்டரைத் தாக்கியதாகக்குற்றம் சாட்டப்பட்டதன் பேரிலேயே அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

சம்பவம் நடந்த தினத்தன்று பிளாட்பாரத்தில் நின்ற சில பிரயாணிகளிடம் முறையினமாக அவர் நடந்து கொண்டாரென்றும் புகார் செய்யப்படடுள்ளது.

---

# அங்கோலா நிலைமையை ஆராய்வதற்கு ஒருகோஷ்டி

## பிரிட்டன் அனுப்புகிறது

லண்டன், ஜூன் 27

அங்கோலா நிலைமையை நேரில் ஆராய்ந்து வருவதற்காக இருவரை அங்கோலாவுக்கு அனுப்பவிருப்பதாக பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபு நேற்று அறிவித்தார்.

அங்கோலா நிலைமையை அறிந்துவருவதற்கு பிரிட்டன் இருவரை அங்கோலாவுக்கு அனுப்புவதற்கு போர்ச்சுக்கல் சம்மதம் தெரிவித்துவிட்டதாக ஹியூம் பிரபு தெரிவித்தார்.

அங்கோலாவில் போர்ச்சுக்கீஸியர் மிருகத்தனமான முறையில் நடந்து கொள்ளுவதாகவும் அங்கு கொடுங்கோலாட்சி நடைபெறுவதாகவும் சிலதினங்களுக்குமுன் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கூறிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கெயிட்ஸ்கல் போர்ச்சுக்கலின் நடவடிக்கையை பிரிட்டன் கண்டிக்காததுமட்டுமல்ல வலியச் சென்று போர்ச்சுக்கலுடன் நேச உறவு கொண்டாடுகிறதென்றும் கண்டித்தது குறிப்பிடத்தக்கது.

வடக்கு அங்கோலாவைச் சேர்ந்த கிராமம் ஒன்றை தேசிய வாதிகள் தீக்கிரையாக்கியதாகவும் இதில் 40 பேர் கொல்லப்பட்டதாகவும் போர்ச்சுக்கல் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. சுமார் 600தேசிய வாதிகள் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

மனிதனை இறைவன் படைத்தது, பிறருக்கு உபகாரம் செய்து கொண்டு கூடி வாழ்வதற்கே. மக்கட்பணியே இறைவன் பணியாகும்.

—சுவாமி விவேகானந்தா


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 14உ (28 6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பாழடைந்த நகரமும் பழைய சரித்திரமும்

அனுராதபுரம், பொலன்னறுவை இவ்விடங்களிலே இடிந்து, பாழாகிக்கிடக்கும் புராதன சின்னங்களை எல்லாம் அடியோடு தரைமட்டமாக்கிவிட்டால் நல்லதென்று வழக்கறிஞர் ஈ. பி. விக்கிரமசிங்கா, கொழும்பில் பிரிட்டிஷ் பிரதம நீதியரசரான லார்ட் பார்க்கருக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது கூறினார். ஏனெனில் பழைய காலத்தைப்பற்றி பெருமையடித்துக் கொள்ளுவதை நாம் மறந்து, எதிர்காலத்தை சிறப்பாக அமைப்பதில் பூரண கவனத்தைத் திருப்பவேண்டுமென்றார் அவர். இதில் வெகுதூரம் உண்மையுண்டு.

பாழடைந்த நகரங்களும் புராதனச் சின்னங்களும், பழைய சரித்திரம் பற்றிய சில ருசியான கதைகளைக்கூறலாம். பழையகால நாகரிகம், கலைச் செல்வம் முதலியவற்றையும் வெளிப்படுத்தவும் செய்யலாம். ஆனால் இதேசமயம் அந்தச் சின்னங்களைக்காட்டி, சில சுயநல அரசியல்வாதிகள் வகுப்பு வாதத்தைக்கிளப்பி நாட்டில் ஒற்றுமையும் அமைதியுமேற்படமுடியாமல் தடுக்கின்றனர். பழைய சரித்திரங்களையும் கூட வகுப்புவேற்றுமையை மூட்டிவிடக்கூடியவகையில் எழுதுவதைப் பார்க்கின்றோம்.

எல்லாளனுக்கும், துட்டகைமுனுவுக்கும் எப்போதோ சண்டை நடந்ததாம். அதில் துட்டகைமுனு எல்லாளனைக் கொன்று வெற்றிபெற்றதாக சரித்திரக்கதை. அதை வைத்துக்கொண்டு சில அரசியல்வாதிகள், சென்றதேர்தலிலும் துட்டகைமுனுவின் பெரிய உருவத்தைச் செய்து சிங்களப் பகுதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்ல முயன்றனர். நல்லவேளையாக அது தடுக்கப்பட்டுவிட்டது. இந்த ஊர்வலத்தின் நோக்கத்தை விளக்கத்தேவையில்லை.

தமிழர் மீது துவேஷம் மூட்டி, அவர்களை விரோதிகளாகப் பாவிக்கும்படி சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு, தேர்தலில் தங்களுக்கு ஓட்டுச் செய்யுமாறு முனையும் அரசியல்வாதிகள், பழைய பாழடைந்த நகரங்களைப்பற்றியும் சின்னங்களைக் குறித்தும் துஷ்பிரசாரம் செய்யப் பயன்படுத்துவதில் வியப்பில்லை. பழைய சரித்திரமும் கூட, சிங்கள-தமிழ் வேற்றுமைகளை வற்புறுத்தி, வகுப்பு விரோதத்தைமூட்டிவிடும்முறையில் புத்தகங்களாகப் பிரசுரிக்கப்படுகின்றன. இவ்வித சரித்திரத்தில் உண்மையிருப்பினும் கூட தேசிய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் இது தடையாகுமாதலால், அவ்விதமான சரித்திரப் புத்தகங்களையும் தடுத்து விடுவதே நாட்டுக்கு நல்லதாகும். நல்லதையும் பயனுள்ளதையும் மட்டும் நினைவு கூர்வோம்; தீயையும், பகைமையையும் மறந்து விடுவோம்.

கனடாவுக்கு ஹைகமிஷனராக நியமிக்கப் பெற்றுள்ள டாக்டர் மலலசேகரா, கொழும்பிலே தமக்கு அளிக்கப்பட்ட ஓர் உபசாரவிருந்தில் பேசுகையில், வெறுப்புக்கும் பகைமைக்கும் இடமளிக்க முடியாதென்றார். துரதிருஷ்ட வசமாக பழைய சரித்திரம் இருசமூகங்களிடையே வேற்றுமையை வளர்ப்பதாக இருப்பின், அச்சரித்திரத்தை மறந்து விடுவதே நல்லது. முன்னர் சிங்களவருக்கும் தமிழருக்கும் மேலான உறவும் இருந்துவந்துள்ளது. அவற்றை நினைவு கூரும்படியான புதிய சரித்திரம் எழுதி, எதிர்கால நவயுகத்துக்கு மேலான அஸ்திவாரமிடுவோம்.

# கோவாவில் போர்த்துக்கல் நடத்தி வரும் அட்டூழியம்

## மக்கள் விடுதலை பெறும் காலம் விரைவில் வரும்

— வ. மகாதேவன் —

கோவா, டமான், டியு ஆகிய மூன்று சிறிய இடங்களிலும் சுமார் ஆறரை லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இம்மூன்று பிரதேசங்களினதும் மொத்த விஸ்தீரணம் ஏறத்தாழ 1,300 சதுரமைல். இதில் 3.9 லட்சம் அதாவது சுமார் 60 சத விகிதம் இந்துக்கள். கிறிஸ்தவர்கள் சுமார் 2.4 லட்சம். முஸ்லிம்கள், பௌத்தர்கள், யூதர்கள், ஐரோப்பியர்கள் உட்பட வேறு இனத்தவர்களும் இப்பிரதேசங்களில் வசிக்கின்றனர்.

கோவா, டமான், டியு ஆகிய மூன்று இடங்களையும் பரிபாலிப்பதற்காகபோர்த்துக்கேய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மகாதேசாதிபதி கோவாவில் வசித்துவருகின்றார். இவருக்கு உதவியாக 14 உறுப்பினர்களைக்கொண்ட ஓர் ஆலோசனைச் சபை இருக்கின்றது. இவர்களுள் 9 பேர் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்கள்; ஏனைய ஐந்து பேரும் வரி செலுத்தும் செல்வந்தர்களால் தெரிவுசெய்யப்படுகின்றனர். எனவே, உத்தியோகத்தர்களின் உதவியுடன் கோவாவில் மகாதேசாதிபதியின் எதேச்சாதிகார ஆட்சியேநடைபெறுகின்றது. போர்த்துக்கல்லில்சர்வாதிகார ஆட்சிநடைபெறும்போது அதன் குடியேற்ற நாடுகளில் சனநாயக ஆட்சிக்கு இடமேது?

### உரிமைகள் மறுப்பு

கோவாவில் மக்களுக்கு அரசியல், குடியியல் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகளும் பொதுக்கூட்டங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்பட்டு பலர் கைதுசெய்யப்பட்டுவருகின்றனர். பத்திரிகைகள்மீது கடுமையான தணிக்கை விதிக்கப்பட்டிருக்கிறது. இரவுபகலாக இராணுவத்தினர் ரோந்துசுற்றி வருகின்றனராம். சுருக்கமாகக் கூறப்போனால் பயங்கர ஆட்சியே நிலவிவருவதாகக் கூறவேண்டும். ஆபிரிக்காவிலுள்ள போர்த்துக்கேய குடியேற்ற நாடாகிய அங்கோலாவில் பலாதகார அடக்குமுறையும், சித்திரவதையும், நரபலியும் தாண்டவமாடுகின்றன. கோவாவின் நிலைமையும் இதுவேதான்.

ஏகாதிபத்திய வல்லரசுகளுள் ஒன்றாகிய பிரான்ஸ்கூட கடந்த இரண்டுவருட காலத்தில் அல்ஜீரியா நீங்கலாக பல குடியேற்ற நாடுகளுக்கு சுயாட்சி வழங்கியிருக்கும் போது ஏகாதிபத்தியத் திமிர் பிடித்த போர்த்துக்கல் தனது குடியேற்ற நாடுகளை அடக்கி ஒடுக்கி ஆட்சி புரிந்துவருவது விசித்திரமான கொள்கையாகவே இருக்கின்றது. இந்த விசித்திரமான பழைய பொல்லாத ஏகாதிபத்தியக் கொள்கைக்கு அடிப்படையாக சில காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு ஆராய்வோம்:—

1. ஐரோப்பாவில் பொருளாதாரத்துறையில் ஒரு வறிய நாடாக இருந்துவரும் போர்த்துக்கல் தனது குடியேற்ற நாடுகளிலிருந்தே வருமானத்தின் பெரும்பகுதியைப் பெற்றுக்கொள்கின்றது. இதனால் குடியேற்ற நாடுகளுக்கு சுயாட்சி வழங்கி இந்த வருமானத்தை போர்த்துக்கல் இழந்துவிட விரும்பவில்லை.

2. குடியேற்ற நாடுகளில் வசித்துவரும் மக்களுக்குச் சகல உரிமைகளையும் மறுத்து அயல்நாடுகளுக்குத் தொழில் செய்யும் அடிமைகளாக அனுப்பியும், பொருள்களை சட்ட விரோதமாக அயல்நாடுகளுக்குக் கடத்திச் சென்றும், கனிப்பொருள்களை (சுரங்கப் பொருள்களை)ப் போர்த்துக்கல்லுக்கு ஏற்றிச்சென்றும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் இந்நாடு தனது குடியேற்ற நாடுகளுக்குச் சுயாட்சி வழங்கும் என்று நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

3. வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்தில் போர்த்துக்கல் ஓர் உறுப்பு நாடாக இருப்பதால் ஏனைய உறுப்பு நாடுகளின் உதவியையும் ஆதரவையும் எதிர்பார்த்து அதிதீவிரமாக முரட்டு ஏகாதிபத்தியக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. பிரித்தானியாகூட போர்த்துக்கல்லுக்கு ஆதரவு தெரிவித்திருப்பது ஒன்றுமாக விளங்கவில்லை. பிரித்தானியா இவ்வாறு போர்த்துக்கல்லை ஆதரித்துவருமானால் ஆபிரிக்க நாடுகளின் வெறுப்பிற்கும் எதிர்ப்புக்கும் ஆளாகவேண்டியதுதான்.

4. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் போர்த்துக்கல்லின் ஏகாதிபத்தியம் தொடர்பான பிரச்சினைகள் விவாதிக்கப்படும்பொழுது கடல்கடந்து காணப்படும் தனது குடியேற்ற நாடுகள் எல்லாம் போர்த்துக்கல் நாட்டின் கூறுகளென்று பலமுறை போர்த்துக்கல் வாதித்திருக்கின்றது! தொடர்ந்தும் அவ்வாறே வாதித்து வருகின்றது. சில ஏகாதிபத்தியநாடுகள் போர்த்துகல்லை ஆதரித்தும் வாக்களித்துள்ளன!

அங்கோலாவிற்கு மேலதிக படைகளை அனுப்பி மக்களின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்குவதில் ஈடுபட்டிருக்கும் போர்த்துக்கல் பழைய ஏகாதிபத்தியக்கொள்கையை இறுகப் பிடித்துக்கொண்டிருந்து வருகின்றது என்றே கூறலாம்.

### கொள்ளை லாபம்

கோவாவில் விலைவாசிகள் ஏறிக்கொண்டு வருவதாகவும் இதனால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இரு மடங்கு மும்மடங்கு சம்பளம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. உயர்ந்த சம்பளங்களை வழங்குவதற்காக போர்த்துக்கேயர் இந்தியாவில் இறக்குமதிசெய்யப்படாத பல விலையுயர்ந்த ஆடம்பரப் பொருள்களை கோவாவில் இறக்குமதி செய்து இந்தியப் பிரதேசத்திற்குச் சட்டவிரோதமாக கடத்திச் சென்று கொள்ளை லாபத்திற்கு விற்பனை செய்கின்றனராம்! ஏற்றுமதி தடுக்கப்பட்டுள்ள பொருள்கள் சட்ட விரோதமாக இந்தியாவிலிருந்து கோவாவிற்கு கடத்திச் செல்லப்பட்டும் பணம் சம்பாதிக்கப்படுகின்றது. கோவாவிலுள்ள இரும்புச் சுரங்கங்களில் வேலை பார்ப்பதற்காக இந்திய மக்களை கோவாவிற்குக் கடத்திச் செல்லப்பட்டு, ஏமாற்றப்பட்டு பல இன்னல்களுக்குள் ஆழ்த்தப்பட்டும் வருகின்றனராம். கடத்திச் செல்வதில் கைதேர்ந்த தரகர்கள் அதிக லாபமடைகின்றனர். தொழிலாளர்களுக்கு கோவாவில் இடவசதி, சுகாதார வசதி, தொழிற்சங்க உரிமை போன்றவை மறுக்கப்படுகின்றன. "பயிற்றப்பட்ட பெண்களுக்கு" அவர்கள் மணம் செய்து வைக்கப்பட்டு அவர்களுடைய ஊதியம் முழுவதும் கோவாவிலே செலவு செய்யப்பட்டிருக்கின்றதாம்.

இந்த அநியாய நிலைமைகளில் இருந்து மக்களை விடுதலை செய்வதற்கு இந்திய அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்குமா? இம்மக்கள் விடுதலைபெறும் காலம் விரைவில் வரும்என நாம் எதிர்பார்க்கலாமா?

## புற்றுநோயை ஒழிப்பதுபற்றி ஆராய்ச்சி

முனிச், ஜூன் 27

மனிதர்கள் 5 பேர்களில் ஒருவரைப் பலி கொள்ளும் கொடுமையான புற்றுநோய் வியாதியை எப்படி ஒழித்துக்கட்டுவதென்பது குறித்து ஆலோசிக்க ஒரு மகாநாடு மேற்கு ஜெர்மன் எல்லையிலுள்ள ஸால்ஸ் — பாக்கில் கூடியது. இதில் ஆஸ்திரியா, ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்த 700 புற்றுநோய் நிபுணர்கள் கலந்து கொண்டனர். இம் மகாநாட்டில் முதலில் பேசிய பேராசிரியர் ஹென்ரிச் க்ராட்டன் "உலக மக்களைப் பாதிக்கும் இவ்வியாதியை ஒழித்துக்கட்ட சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்" என்று குறிப்பிட்டார்.

இம்மகாநாட்டில் வாசிக்கப்பட்ட 40 கட்டுரைகளில் இவ்வியாதியை ஒழித்துக் கட்டுவதற்கான வழிகளும் முறைகளும் விவரிக்கப்பட்டிருந்தன. பல காரணங்களினால் பலவிதங்களில் ஏற்படும் இந்நோயை உடனடியாக ஒழிக்க வழி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் சில துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சருமத்தில் ஏற்படும் புற்றுநோயைக் குணப்படுத்த வழி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. 100 க்கு 95 "கேஸ்"களில் நிரந்தரமாகக் குணம் ஏற்பட்டுள்ளது. சில ரகக் கட்டிகளை அகற்றுவது கூட சாத்யமாகியிருக்கிறது. ஹாம்பர்க்கைச் சேர்ந்த டாக்டர் ஜி. ஷ-பெர்ட் 684 பெண் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்து அவர்கள் மார்பகத்தில் தோன்றியுள்ள புற்று நோயை அகற்றியிருக்கிறார். நோய் முதிர்ந்த 'கேஸ்'களில் அவர் வலியைக் குறைப்பதில் வெற்றியடைந்திருக்கிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் மயானத்துக்கு நேற்று முதல் முதலாகச் சென்று பார்த்தேன். சுத்தமாகவும், சுகாதாரமான முறையிலும்அது அமைந்திருந்தது. பசுமையான மரங்கள் குளிர்ந்த நிழலைத் தருகின்றன. வந்தவர்கள் வசதியாக உட்கார்ந்திருக்க மண்டபங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. ஒரு சபையினரே இதை இப்படி நல்லபடியாக பராமரித்து வருவதாக அறிந்தேன். இதற்காக அவர்களைப் பாராட்டவேண்டும்.

* * *

அங்கு நடைபெற்ற தகனக் கிரியைக்கு கொழும்பிலிருந்து ஒரு பஸ்ஸிலே 20 க்கு மேற்பட்ட சிங்களவர் வந்திருந்தது என்னைப்போல் பலரது மனதையும் கவர்ந்தது. அச் சிங்கள அன்பர்கள், மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி இருகைகளையும் கூப்பி அந்தத் தமிழ்த்தாயின் புனித சடலத்துக்கு வணக்கம் தெரிவித்தார்கள்.

வகுப்பு துவேஷ விஷம் நாடெங்கும் பரவி, ஒரு சமூகம் மற்றவரை விரோதிகள் என்று நினைக்கும் இக்காலத்தில்,கொழும்பிலிருந்துபலமைல் தூரம் கடந்து சிங்கள அன்பர்கள் ஒரு தமிழ்த்தாய்க்கு இப்படி மரியாதை செலுத்தியதைக்காண மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது, எதிர்காலத்திலே இரு சமூகங்களுக்கும் நல்லுறவு ஏற்பட இடமுண்டு என்ற நம்பிக்கைக்கும் அது ஒரு நல்ல அறிகுறியாக இருந்தது.

* * *

விஸா முடிந்தவர்கள் பலர் தலைமறைவாக இருந்து வருகிறார்களல்லவா? புதிய விஸா வரியான ரூ 400 கட்டினால், அவர்களுக்கு இங்கு வசிக்க விஸா கிடைக்குமா? என்று ஓர் அன்பர் ஆவலுடன் கேட்கின்றார்.

இதைப் பற்றி விசாரித்தேன். ரூ. 400 கட்டுவதாயிருந்தால், இமிகிரேஷன் இலாகா, விஸாவை அநேகமாகக் கொடுப்பதாயும், அரசாங்கத்துக்கு பணம் வேண்டியிருப்பதால், இவ்விதம் செய்வதாகவும் தெரியவந்தது. முன்னரெல்லாம் விஸா எடுக்க பலவித 'ரேட்' இருந்ததாகக் கேள்வி. ஒருவருஷத்துக்கு இரண்டாயிரம், மூவாயிரம் என்றுகூட கட்டியதாகக் கேள்வி. கைலஞ்சத்துக்கு அதிக இடமிருந்தது. ரூ. 400 கட்டுபவர்களுக்கு விஸா கொடுப்பதென்று அரசாங்கம் ஒழுங்குசெய்தால், அரசாங்கத்துக்கு அதிகவருமானம் கிடைப்பதுடன், கைலஞ்சப் பழக்கமும் அப்பகுதியில் ஒழிய ஓரளவு வழிபிறக்கலாம்.

* * *

'தினகரன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்து வரும் திரு.கைலாசபதி, இம்மாதமுடிவில், அப்பதவியை விட்டு விலகி, இலங்கை பல்கலைக் கழகத்தில் சேரப்போவதாக ஓர் அன்பர் தெரிவித்தார். அவருக்கு கொழும்பிலே நேற்று சில அன்பர்கள் ஓர் உபசார விருந்தளித்தனராம்.

திரு. கைலாசபதி இளம் வயதிலேயே தினசரிப் பத்திரிகாசிரியராகி வெற்றி கண்டவர். அதிக சேவைக்கு இடமுள்ள இப் பெரிய பதவியை தாமாக அவர் விட்டுவிட்டு செல்லுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை.

காரணத்தைப் பற்றி விசாரித்ததில், அரசாங்கம் பத்திரி

(8ம் பக்கம் பார்க்க)

# வருமானவரி செலுத்த தவறிய 7400 பேர் மீது வழக்கு

கொழும்பு, செவ்வாய்

வருமானவரி செலுத்தாத 400 பேர் மீது உள்நாட்டு வருமான இலாகா வழக்குத் தொடர்ந்துள்ளது.

1960-ம் ஆண்டு மே தொடக்கம் 1961-ம் ஆண்டு ஏப்ரலுக்கு உட்பட்ட காலத்தின் வரிப்பணத்தைச் செலுத்தத் தவறியவர்கள்மீதுதான் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது. வரிப்பணம் செலுத்துவோரில் சிலர் சிறிதும் அக்கறை காட்டுவதில்லையென்றும் நீதிமன்றத்திலிருந்து கட்டளை செல்லும்வரை அவர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்குக் கூடப் பதில் அனுப்புவதில்லை என்றும் உள்நாட்டு வரி வருமான இலாகாவைச் சேர்ந்த சிப்பந்தியொருவர் தெரிவித்துள்ளார். 7,400 பேரில் 3,700 பேர் வரிப்பணம் செலுத்தத் தவறியவர்கள். 500 பேர் தமது சொந்த வரிகளையும் உத்தியோக வரியையும் செலுத்தத்தவறியவர்கள் 1700 பேரிலிருந்து பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கைஎடுப்பதற்கு நீதிமன்றத்தின் உத்தரவை வரிவருமான இலாகா பெற்றுள்ளது. இவர்களிடமிருந்து சமீபத்தில் பணம் அறவிடப்படுமெனத் தெரியவருகின்றது.

## 20 நாடுகளை கொண்டபடை குறைப்பு மகாநாடு வேண்டும்

### ரஷ்யாவுக்கு அமெரிக்கா தெரிவித்துள்ள யோசனை

வாஷிங்டன், ஜூன் 27

அடுத்தமாதம் படைகுறைப்பு சம்பந்தமாக நடைபெறவிருக்கும் 10 நாடுகள் மகாநாட்டை 20 நாடுகளைக் கொண்டதாய் விஸ்தரிக்க வேண்டுமென அமெரிக்கா, ரஷ்யாவுக்கு யோசனை தெரிவித்திருக்கிறது என அமெரிக்க வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இம்மாகாநாட்டில் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்பது அமெரிக்காவின் யோசனை எனக் கூறப்படுகிறது. ஆசியாவில் இந்தியா உட்பட 4 நாடுகளின் பெயரை அது சிபார்சு செய்திருப்பதாய் அரசாங்க சார்பற்ற செய்திகள் கூறுகின்றன.

கம்யூனிஸ்ட் நாடுகள், மேற்கு நாடுகள், நடுநிலைமைநாடுகள் ஆகிய மூன்று கோஷ்டிகளுக்கும் மகாநாட்டில் சமபல பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென ரஷ்யா ஏற்கனவே வற்புறுத்தி வந்துள்ளது.

## இன்னும் 40 ஆண்டுகளில் உலகஜனத்தொகை 600 கோடி!

### ஐ.நா.உணவுவிவசாய ஸ்தாபனம் தகவல்

மூனிச், ஜூன் 27

"2000ம் ஆண்டு பிறக்கும் போது 600 கோடி மக்கள்,உண்டு உயிர் வாழவேண்டுமானல் உணவு உற்பத்தி இப்போதுள்ளதைப்போல இரண்டு மடங்காகவும் பிராணிகளை அடிப்படையாகக்கொண்ட உணவுஉற்பத்தி மும் மடங்காகவும் பெருக வேண்டும்." என ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் உணவு விவசாய ஸ்தாபனம் கூறியுள்ளது. தகவல் சேகரிப்பு, ஆராய்ச்சிகள் இவைமூலம் இப்போதுள்ள மக்கள் போதிய அளவுக்கு உணவு கிடைக்காத நிலையிலேயே இருக்கிறர்கள் என்பது வெளியாகியுள்ளது. இந்நிலைமை பல நாடுகளில் ஜனத்தொகை பெருகாமல் கட்டுப்படுத்துவது எப்படி என்பதுபற்றி சிந்திக்கச் செய்துள்ளது.

மேற்கு ஜெர்மனி வைத்திய நிபுணர்கள் சமூக நலவாதிகளும் இப் பிரச்சினை குறித்து நீண்டகாலமாக கவனம் செலுத்தி வருகின்றனர். மூனிச்சில் சமீபத்தில் நடைபெற்றமகாநாடொன்றில் "ஜனப் பெருக்கமும் அதனல் ஏற்படும் பிரச்சினைகளும்" என்பதுபற்றி விவாதிக்கப்பட்டது. ஐரோப்பியநாடுகளிலும் ஜனத்தொகை அதிகரித்துவருவதால் அதைக் கட்டுப் படுத்தவேண்டியதவசியம் என்பதை இம்மகா-நாட்டில் கலந்துகொண்ட நிபுணர்களில் பெரும்பாலோர் வற்புறுத்தினர்.

## சல்வீனியா கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 27

இலங்கையிலுள்ள நெற்பயிர் விளையும் பிரதேசங்களில் பெரும் பகுதியை எதிர்நோக்கும் பெரிய பிரச்னைகளில் ஒன்று சல்வீனியா எனும் நீரில் வளரும் பூண்டின் பெருக்கமேயாகும். 1954 ல் இவற்றை ஒழிப்பதற்கான மருந்து அடிக்கத் தொடங்கியும் சல்வீனியா பெருகிக்கொண்டே வருகிறது. இப்போது பயிர் செய்யக்கூடிய பிரதேசத்தில் 5 சத விகிதமான 50,000 ஏக்கர் சல்வீனியா காரணமாக பயிர் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இலங்கைத் தொழில் நுட்ப அதிகாரிகளும் அமெரிக்க விஞ்ஞான தாவர விஞ்ஞான வல்லுனர்களும் சேர்ந்து வகுத்துள்ள "சுய உதவி முறை" இலங்கையில் சல்வீனியாவை ஒழிக்க உதவும் என நம்பிக்கை தருகிறது. கிராமப்பகுதி மக்கள் "நாப் சீக் ஸ்பிரேயர்கள்" மூலம் கலக்கப்படாத சல்வீனியாவைத் தடுக்கும் மருந்தை உபயோகிக்கலாம். ஒருவர் ஏக்கருக்கு 32 ரூபா செலவில் தினத்திற்கு இரண்டு ஏக்கர் நிலத்திற்கு இம்மருந்தை அடிக்கலாம்.

## 6 வாரம் சிறையுடன் ரூ. 1000 அபராதம்

நாத்தாண்டியா, செவ்வாய்

பெருவெல்லயைச் சேர்ந்த ஆபிரகாம் அப்புகாமி என்பவர் வாடகைக் காரொன்றில் 4 பெரிய அமிலச்சாடிகளில் கள்ளத்தனமாக உற்பத்திசெய்யப்பட்ட 824 திரும் சாராயத்தை எடுத்துச் சென்றதாக மருவில்லை கலால் இலாகா நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் டி. எச். எம். சமத்தினல் குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் சிலாபம் மஜிஸ்திரேட் திரு. சில்வாசெல்லையா, குற்றவாளியாகக்கண்ட ஆபிரகாம் அப்புகாமிக்கு ஆறுவார கால கடூழிய சிறைத்தண்டனை விதித்து, ரூ. 1000 குற்றப் பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

# ஒரே வாரத்தில் 100 கஜ நீளவீதி அமைப்பு

## ஜெர்மனியில் சாதனை

ஹனேவர், ஜூன் 27

அதிசயிக்கத்தக்க பொறியியல் சாதனைகள் இங்கு நடைபெற்ற ஜெர்மன் கைத்தொழில் கண்காட்சியில் விளக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஆண்டிலும் மே மாத ஆரம்பத்தில் இக்கண்காட்சி சுமார் 10 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இவ் வருஷக் கண்காட்சியில் 26 நாடுகளைச் சேர்ந்த 5,120 காட்சியாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். உலகிலேயே சிறந்த தொழில் நுணுக்கக் கண்காட்சியாக இது இவ் வருஷம் விளங்கியது.

பொறியியல் துறையில் தானே இயங்கும் முறை பல ரகங்களில் காணப்பட்டன. மிகவும் கைதேர்ந்த நிபுணர்களும் கண்டு அதிசயிக்கும் வண்ணம் இவை அமைந்துள்ளன. புதுப்புதுக் கண்டுபிடிப்புகளால் தொழிலுக்கு பெரும் உதவி என்பதுடன் மட்டுமின்றி அன்ருட வாழ்க்கையை ஆனந்த மயமாகச் செய்யவும் இவை உதவக் கூடியவை.

ஒரு எண்ணெய்க் கப்பலின் ஒரு பாகம் ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் எடை 110 டன், கப்பல் கட்டுவதற்கான தனித்தனிப் பாகங்களும் செய்ய ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்பதற்கு இது ஒரு உதாரணம். 82 மீட்டர் கிரேன் இயந்திரம் ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இதை ரேடியோ டெலிகிராபி மூலமே இயங்கச் செய்ய முடியும். மிக மிகச் சிறிய காட்சிப் பொருள், சிறிய பொருள்களைப் பெரிதாகக் காட்டும் ஒரு சாதனம். ஒரு குண்டூசியின் தலையைவிட இது பெரிதாக இல்லை.

சர்வதேச நிபுணர்களின் கவனத்தை மிகவும் கவர்ந்தது பிரபல ஜெர்மன் எஃகு உற்பத்தி கம்பெனியான "கிரப்" தயாரித்துள்ள ஒரு மாடலாகும். ரோடு அமைக்கும் யந்திரம் ஒன்றை அவர்கள் காட்சிக்கு வைத்திருந்தனர். இக்கம்பெனி தயாரித்துள்ள ஒரு முறைப்படி 100 கஜ தூரமுள்ள ரஸ்தாவை ஒருவார காலத்திற்குள் அமைக்க முடியுமாம். உயர்ந்த பாணியில் அமைக்கப்படும் இந்த ரஸ்தாவிற்கு தாங்கலாக உயர்ரக எஃகு குழாய்களே உபயோகிக்கப்பட்டுள்ளன. சுவரின் கனம் 10 மில்லி மீட்டர்கள். இந்த ரஸ்தா மீது 60 டன் கனமுள்ள வண்டிகள் செல்லலாம். ரஸ்தாவின் மேல் தளத்திற்கு காங்ரீட் பாளங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

ஜெர்மன் பொறியியல் துறை அரும்பெரும் சாதனைகளைச் செய்துள்ளது. பிளாஸ்டிக் கைக்கொண்டு பலரகப் பொருள்கள் செய்யப்பட்டிருந்தன. உலக நாடுகளில் பொறியியல் துறை சாதனை எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்துள்ளதென்பதை இக் கண்காட்சி நிரூபித்துவிட்டது.

## அல்ஜீரியாவில் முஸ்லிம் தலைவர் சுடப்பட்டார்

பாரிஸ், ஜூன் 26

பாரிஸில் சிறைவைக்கப்பட்டிருந்த 5 அல்ஜீரிய கைதிகள் சிறைதப்பிச் சென்றுவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது. இதே சமயம், அல்ஜீரியாவில் சிறைவைக்கப்பட்டிருந்த அல்ஜீரிய முஸ்லிம் தலைவர் ஒருவர் சிறை தப்பி ஓட முயன்றபோது சுட்டுக் கொல்லப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

# டயர் தொழிற்சாலை விரைவில் நிறுவப்படும்

## பேச்சு வார்த்தைகள் பூர்த்தி

கொழும்பு, செவ்வாய்

சோவியத் தொழில் நுட்ப தூதுகோஷ்டிக்கும் கைத்தொழில் இலாகா அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற டயர் தொழிற்சாலை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது.

இரு அரசாங்கங்களும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவுடன் டயர் தொழிற்சாலைக்கான வேலைகள் ஆரம்பமாகும். இரண்டு மாதங்களில் வேலைகள் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

டயர் தொழிற்சாலை களனிப் பகுதியிலுள்ள பில்மெண்டோ தோட்டத்தில் 37 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும்,

முதற்கட்டத்தில் 2,50,000 டயர்களும் பின்னர் 3,60,000 டயர்களும் மூன்ருவது கட்டத்தில் 6,00,000 டயர்களும் இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 400 முதல் 500 வரையான ஊழியர் இதில் வேலைக்கமர்த்தப்படுவர் என்த் தெரிகிறது.

## இலங்கைத் தேயிலையின் இறக்குமதி

### ரஷ்யாவில் குறைந்துவிட்டது

கொழும்பு, செவ்வாய்

சோவியத் யூனியன் கடந்த 1960ல் மொத்தம் 749,000 ருத்தல் தேயிலைதான் இலங்கையில் இருந்து இறக்குமதிசெய்துள்ளது. சர்வதேச தேயிலைக் கமிட்டி விடுத்துள்ள அறிக்கையின்படி 1959ம் ஆண்டில் இலங்கையில் இருந்து தேயிலை சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதிசெய்யப்படவில்லையென்றும் 1958ம் ஆண்டு இலங்கை சுமார் 2,729,000 ருத்தல் தேயிலை சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்தது என்றும் தெரிய வருகிறது.

1960ல் இலங்கை தனது தேயிலையை அயர்லாந்து, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா,கனடா,இன்னும்பலஅரபு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துள்ளது. 1959ம் ஆண்டில் ஏற்றுமதி செய்ததை விட இப்பொழுது ஏற்றுமதி அதிகரித்துள்ளது என்றும் அறியப்படுகிறது.

## புதிய விமான நிலையம்

### அமெரிக்கா உதவும்

கொழும்பு, ஜூன் 27

இலங்கையின் தேசிய சிவில் விமானப் பகுதியின் மேற்பார்வையின் கீழ் பெரிய 'ஜெட்' விமானங்கள் உட்பட சகல சர்வதேச விமானங்களும் உபயோகிக்கக்கூடிய புதிய விமான நிலையமொன்று நவீன வசதிளடங்கிய கட்டுநாயக்காவில் கட்டப்படவிருக்கின்றது.

இப்பகுதியிலுள்ள சிறந்த சர்வதேச விமான நிலயங்களுடன் ஒப்பிடக்கூடிய விமான நிலயமொன்றை இலங்கைக்குக் கொடுக்கும் இத்திட்டத்தில் அழகான இறங்குதுறைக் கட்டடமொன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய விமான நிலயத்தைக் கட்டுவதற்குத் தேவையான நிதியின் பெரும் பகுதியைக் கொடுத்துதவ அமெரிக்கா இணங்கியுள்ளது.

## அமெரிக்க தொழில்நுட்பஉதவி

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கம் அதிக மின்சக்தி விநியோகத்தை அதிகரிக்க மேற்கொண்டுள்ள திட்டத்தின் கீழ் தொழில் அபிவிருத்தி மேலும் விருத்தியடைய முடியும். அமெரிக்கா நிதி உதவி வழங்கும் இத் திட்டத்தின் கீழ் அதிக மின்சக்தி உற்பத்தியாக்குவதுடன், பட்டினங்களுக்கும் கூடிய மின்சக்தி விநியோகிக்கப்படும்.

இலங்கை அரசாங்கமும் அமெரிக்காவும் இலங்கையின் முதல் கைத் தொழிற் தோட்டத்தை நிறுவுவதற்கு தனித்தனியே பல லட்ச ரூபா வழங்குகின்றன. சுமார் 100 சிறு கைத்தொழில் நிலையங்களுக்கு, யந்திரங்கள் தவிர்ந்த ஏனைய தேவைகள் அனைத்தையும் இத்தொழிற் தோட்டம் வழங்கும். இந்தப் புதிய உற்பத்தி முயற்சிகள் வெளிநாட்டு செலாவணியை சேமிப்பதுடன் வேலை வசதிகளையும் பெருக்கி மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை வழங்கும்.

இலங்கை தேயிலை ஆராய்ச்சிக் கழகத்தின் வேண்டுகோளின் பேரில் பூச்சிகளின் தொல்லைகளை எதிர்க்கக்கூடிய புதிய ரக தேயிலைச் செடியை உண்டுபண்ணுவதற்கான தொழில் நுட்பங்களை ஆராய்வதற்கு அமெரிக்கா தொழில் நுட்ப நிபுணரொருவரை தந்துதவியுள்ளது.

ரப்பர் ஆராய்ச்சிக் கழகத்துடன் வேலை செய்யும் அமெரிக்க நிபுணரொருவர் ரப்பர் பயிரிடுவதற்கு புதிய வித்துக்களை விருத்தி செய்வதற்கு ஒத்தாசை புரிந்துள்ளார். கூடிய பயனளிக்கக் கூடியதும், நோய்களை எதிர்க்கக் கூடிய ரப்பர் மரங்களை விருத்தி செய்வதற்கு இத்திட்டம் உதவுகிறது.

## அநுராதபுரத்தில் 5 லட்சம் மக்கள்

அனுராதபுரம், செவ்வாய்

போசன் தினமான இன்று அநுராதபுரத்தில் 5 லட்சம் மக்கள் புனித சின்னங்களை கண்டுகளித்ததாக மதிப்பிடப்படுகிறது. கைத்தொழில் உள்நாட்டு கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா விசேஷ போசன் தினச் செய்தி ஒன்றை விடுத்திருக்கிருர்.

## புதிய ஸ்தல ஸ்தாபன சேவை கமிஷன்

கொழும்பு, செவ்வாய்

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா, ஒரு புதிய ஸ்தலஸ்தாபன சேவை கமிஷனை அமைத்துள்ளார்.

இந்தப் புதிய ஸ்தலஸ்தாபன சேவைகமிஷனின் அங்கத்தவர்களாகதிரு டபிள்யூ.டி.வி.மகாதன்திலா, திரு. ஜே. ஈ,எம்.டி. சேரம், டாக்டர் பி. ஆர். தென்னக்கூன், திரு. எஸ். எம். ஜமால்தீன், திரு. ஆனந்தகுணசேகரா, திரு. ஏ. வி. நடராஜா, திரு. ஆனந்தஜயசிங்கி, திரு. டட்லி சமரவிக்கிரமா, திரு. ஹரி பனபொக்கே ஆகியோர் மந்திரியினல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் பயிற்சி நிலையங்களை மந்திரி பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், புதன்

விவசாய அமைச்சரான திரு. எம். தென்னக்கோன் செனட்டர் ரி. டி. டி. சொய்சா, கல்லோயா அபிவிருத்திச் சபை அங்கத்தவரான திரு. பி. சில்வா ஆகியவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்து சில முக்கிய இடங்களைப் பார்வையிட்டனர்.

திருநெல்வேலி, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள விவசாயப் பாடசாலைகளையும் யாழ்ப்பாணம் தொழில் நுட்பப் பாடசாலையையும் பார்வையிட்டுவிட்டு அன்று மாலையே கொழும்புக்கு திரும்பினரெனத் தெரிகிறது.

வடபகுதியிலுள்ள சில அபிவிருத்தி சம்பந்தமாக நேரில் பார்வையிட்டு அறிந்துகொள்ளவே அவர்கள் இங்கு வந்து சென்றிருப்பதாகத் தெரிகிறது.

## லண்டனில் ஆப்கான் பிரதமர்

லண்டன், ஜூன் 27

லண்டன் வந்துள்ள ஆப்கானிஸ்தான் பிரதம மந்திரி, பிரிட்டிஷ் வெளி விவகார மந்திரி ஹியூம்பிரபுவைச் சந்தித்துப் பேசினர். பக்கிங்ஹாம் அரண்மனையில் எலிஸபெத் ராணியையும் அவர் சந்தித்தார்.

## ஜப்பான் - கனடா கூட்டறிக்கை

ஒட்டாவா, ஜூன் 27

அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கு பொருளாதார தொழில் நுட்ப உதவிகள் அளிக்கப்பட [illegible] என்று [illegible]ன் பிரதமர் இ[illegible]வும் கனடாப பிரதமர் திரு. [illegible] க்கரும் நே[illegible] விடுத்த ஒரு கூட்டறிக்கையில் தெரிவித்தனர்.

கிழக்கு - மேற்கு உறவு பற்றி ஜப்பான் பிரதமரும் கனடாப் பிரதமரும் பரிசீலனை செய்ததாகவும் லாவோஸ் ஒரு சுதந்திர நடுநிலைமை நாடாக இருக்க வேண்டுமென்று இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தியதாகவும் அந்தக் கூட்டறிக்கை தெரிவித்தது

## [illegible]தாடி' பொன்சேகா

கொழும்பு, திங்கள்

திரு. சுசந்தாடி'பொன்சேகா, மணிலாவிலும், டோக்கியோவிலும் இலங்கை ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி பாரிசில் அவர் பதவி ஏற்கமாட்டார்.

## தேயிலை ஏற்றுமதி

கல்கத்தா, ஜூன் 27

பாரத தேயிலைச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நேற்று கல்கத்தாவில் நடைபெற்றது.

அஸ்ஸாம் ராஜ்ய அபிவிருத்தி மந்திரி திரு. திரிபாட்டி இக்கூட்டத்தில் பேசுகையில் தேயிலை ஏற்றுமதி மார்க்கட்டை இழந்துவருவது வருந்தத்தக்கது என்றார்.

தேயிலைத் தொழிலில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பத்தாம் பசலிமுறைகளைக் கைவிட வேண்டுமென்று திரு. திரிபாட்டி கூறினர்.

பிரசாரத்தின் மூலம் தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று திரு. திரிபாட்டி யோசனை கூறினர்.

## உடுப்பிட்டி சிறுபான்மை தமிழர் தீர்மானம்

உடுப்பிட்டி, ஞாயிறு

அ. இ. சிறுபான்மைத் தமிழர் மகாசபை, உடுப்பிட்டிக் கிளையின் பொது நிர்வாக சபைக் கூட்டம் இமையாணன் சனசமூக நிலையத்தில், மேற்படி கிளைச் சங்கத் தலைவர் திரு. எஸ். வல்லிபுரம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

வேலையற்றிருக்கும் ஆசிரியர்களின் தற்போதைய நிலைமை பற்றி குறிப்பாக ஆராயப்பட்டது.

இமையாணனிலுள்ள சிறுபான்மைத் தமிழர் சிலர் குடியிருக்கும் காணிக்குச் சொந்தக்காரர்கள் குடியிருப்பவர்களை காணியிலிருந்து வெளியேறுமாறு வழக்கறிஞர் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதையிட்டு அவர்களது உதவிக்கு ஆவன செய்யவேண்டுமென்னும் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

## இந்தியாநிதிமந்திரிக்கு நைஜீரிய அழைப்பு

புதுடில்லி, ஜூன் 26

நைஜீரியாவில் இருந்து இந்தியா வந்திருக்கும் பொருளாதார தூதுக்குழு இந்திய யூனியன் நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியது.

மூன்றுவது ஐந்து வருடத் திட்டத்தின் மூலம் அரசியல் சுதந்திரத்திற்கான அடிப்படையில் பொருளாதார நிறைவைக் கொண்டுவர முயல்வதாகப் பேச்சுவார்த்தையின் போது திரு. மொரார்ஜிதேசாய் குறிப்பிட்டார்

நைஜீரிய நிதி அமைச்சர் திரு. எப். எஸ். ஒக்கயிற் எபோ திரு மொரார்ஜி தேசாயை நைஜீரியாவுக்கு அழைத்துள்ளார்.

## புரட்சி நசுக்கப்பட்டது

### வெனிசூலா அறிவிப்பு

ரியோடிஜனிரோ, ஜூன் 28

தென் அமெரிக்காவில் வெனிசுலா நாட்டில் கராகிஸுக்கு 250 மைல் கிழக்கிலுள்ள பஸிலோன என்ற இடத்தில் தோன்றிய இராணுவப் புரட்சி நசுக்கப்பட்டுவிட்டதாக வெனிசுலா ரேடியோ இன்று அறிவித்தது

புரட்சிக்காரருக்கும் அரசாங்கத் துருப்புக்களுக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பில் 40 பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.



# நோயாளரைப் பார்வையிடுவதில் பொதுமக்கள் படும் இன்னல்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நோயாளரைப் பார்வையிடச் செல்லும் பொதுமக்களுக்கு அதிக அசௌகரியம் ஏற்படுவதாகத் தெரிகிறது. தூர இடங்களிலிருந்து வரும் பொதுமக்கள் பலர் உள்ளே செல்வதற்கான அனுமதி வழங்கப்படும் வரை அவர்கள் வெளியில் தங்கி நிற்கவேண்டியிருக்கிறது. இதனால் ஆஸ்பத்திரி வீதிப்போக்குவரத்துகள் மாலை 4 மணியளவில் முற்ருகப் பாதிக்கப்படுகின்றது. சில விபத்துக்களேற்படவும் இது காரணமாக இருக்கின்றதெனச் சொல்லப்படுகிறது.

வெய்யிலிலும், மழையிலும் இவர்கள் கால்கடுக்க நின்றுகொண்டிருப்பதை ஒவ்வொரு நாளும் பார்க்கக்கூடியதாவிருக்கிறது. கடந்த திங்கட்கிழமை பிற்பகல் சுமார் 4மணியளவில் இந்த ஆஸ்பத்திரியின் முன்புறத்தில் கூடிநின்று கொண்டிருந்த பொதுமக்கள் அப்பொழுது பெய்த மழையினல் பெரும் அவஸ்தைப்படவேண்டியிருந்தது.

இவர்கள் தங்கி நிற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாததால் இத்தகைய அசௌகரியம் பொதுமக்களுக்கு எப்பொழுதுமே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

---

## நியாய விலைக்கடைகள் அவசியமானல் நீடிக்கும்

சென்னை, ஜூன் 27

தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட நியாய விலைக்கடைகள் அவசியமானல் மேலும் தொடர்ந்திருக்கும் என்று தமிழ் நாடு விவசாய மந்திரி திரு. எம். பக்தவத்சலம் தெரிவித்தார்

நகரப்பகுதிகளில் தவிர இதர இடங்களில் அரிசித் தேவை குறைந்து விட்டதென்று திரு. பக்தவத்சலம் கூறினர்.

## தென் காசாய் இராணுவம் காங்கோவுடன் இணைக்க முயற்சி

லியபோல்ட் வில்லி, ஜூன் 27

தென் காசாய் ராஜ்ய இராணுவத்தையும் காங்கோ படையுடன் மேஜர் ஜெனரல் மொபுடுவின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ப்பது சம்பந்தமாக காலேஞ்சியின் தென் காசாய் அரசாங்கத்துடன் லியப்போல்ட் வில்லி அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்திவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

லியப்போல்ட் வில்லி அரசாங்கப்படையுடன் கடாங்கா துருப்புக்களை மேஜர் ஜெனரல் மொபுட்டுவின் தலைமையின் கீழ் இணைப்பதற்கு ஒப்புக்கொண்டு கடாங்கா அதிபர் ஷோம்பே ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுவிட்டார்.

காங்கோ இராணுவம் இனி அரசியலில் தலையிடமாட்டாது என்று மொபுட்டு அறிவித்துள்ளார்

---

# புகையிலை விலை ருத்தலுக்கு 15 சதவீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை விற்பனைச் சங்கம் கமக்காரர்களிடமிருந்து எடுக்கவிருக்கும் புகையிலையின் விலையை இவ்வாண்டு கூட்டியிருக்கிறது இம்முடிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இச்சங்கக் கூட்டத்தில் செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கம் எடுக்கும் மலையாளப் புகையிலையின் 11 தரங்களிலும் முதல் 8 தரப் புகையிலையின் விலையையும் ருத்தலுக்குச் சராசரி 15 சதம் கூடுதலாக இவ்வாண்டு விலை கொடுத்து வாங்குவதென்றும மற்றைய இறுதி மூன்று தரங்களையும் முன்னைய ஆண்டுகளிலிருந்தது போலவே விலையில் எதுவித மாற்றமும் செய்யாது வாங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல மாதகாலமாக எதுவித அலுவல்களும் இன்றிக் கிடந்த இச்சங்கம் திங்கட்கிழமை புகையிலைக் கொள்வனவை ஆரம்பித்ததிலிருந்து ஒவ்வொரு நாளும் கமக்காரர்கள் அங்கு வந்தவண்ணமாகவிருப்பதும் சங்கம் புகையிலை வாங்குவதில் துரிதமாக நடவடிக்கை எடுத்தும் வருகின்றது.

இப்பொழுதிருந்தே புகையிலையை இச்சங்கம் கொள்வனவு செய்தாலும் இப்புகையிலையை அடுத்த ஆண்டு மாசி மாத இறுதியிலேயே மலையாளத்துக்கு அனுப்பும் என்த் தெரிகிறது. யாழ்ப்பாணம் புகையிலையை இந்தியாவில் இறக்குமதி செய்வதில் திருவனந்தபுரம் துறைமுகத்துக்கு மட்டுமே இறக்குமதிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. ஆனல், இயற்கைக் கோளாறுகள் காரணமாக இத்துறைமுகம் இவ்வாண்டு முடியும் வரை இனிமேல் உபயோகிக்க முடியாது. அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தில் மலையாளப் புகையிலையைப் பதனிடுவதற்கேற்ற கடல்நீர் கார்த்திகை மாதத்தின் பின்பே கிடைக்கும் என்பதும் கவனிக்கத்தக்கது. இக்காரணங்களாலேயே அடுத்த ஆண்டு பெப்ரவரி மாத இறுதியில் மலையாளத்துக்குப் புகையிலை அனுப்பப்பட விருப்பதாகத் தெரிகிறது.

---

## யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பலாலிச் சந்தியில் ஒரு மேட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதிக்கொண்டதனல் மூவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சைக்கிள் முற்ருகச் சேதமடைந்துவிட்டது. யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வசிக்கும் இளையதம்பி பூபாலலிங்கம் என்பவர் இன்னெருவரையும் தமது சைக்கிளின் பின்னல் ஏற்றிக் கொண்டு வரும் போது திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அச்சுவித்தியானந்தன் என்பவர் ஓட்டிக்கொண்டுவந்த மோட்டர் சைக்கிள் மோதியதனல் மூவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாகப் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிருர்கள். இது சம்பந்தமாகப் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

∴ ∴ ∴

கரையூர் அடப்பன் வீதியைச் சேர்ந்த எஸ். ஜெயரத்தினம் என்பவர் மோட்டார் சைக்கிள் ஒன்றினல் தட்டி வீழ்த்தப்பட்டதனல் ஆபத்தான நிலையில் பெரியாஸ்ப்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

**மண்கும்பானில்**

வேலணை மண்கும்பானைச் சேர்ந்த 70 வயதான என். சின்னையா என்ற முதியவர் லொறியொன்றினல் தட்டிவிழுத்தப்பட்டதனல் ஏற்பட்ட காயங்களினல் மோசமான நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

**அச்சுவேலியில்**

அச்சுவேலியைச் சேர்ந்த வேலன் பொன்னுத்துரை என்பவர் ஒரு மோட்டார் வாகனத்துடன் மோதுண்டதனல் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸப்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் அச்சுவேலியில் நடைபெற்றது.

∴ ∴ ∴

**சுன்னுகத்தில்**

சுன்னுகத்தைச் சேர்ந்த வீரசிங்கத்தின் மனைவி பொன்னம்மா சுன்னுகத்தில் நடைபெற்ற மோட்டார் வாகன விபத்தொன்றில் அகப்பட்டதனல் பலத்த காயத்துடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்ப்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## வானெலி நிகழ்ச்சிகள்

**கொழும்பு**

(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**புதன் 28-6-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரைஇசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கோட்டுவாத்தியம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 விவாதமேடை, 8-00 சரஸ்வதி பாக்கியராஜா - பாட்டு, 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-45 இஸ்லாமிய கீதங்கள், 10-00 கானமஞ்சரி

**திருச்சி**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 காரைக்குடி சங்கரி அம்மாள் - வீணை.

பகல் 12-00 தொழிலாளருக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 2-10 காரைக்குடி சங்கரி அம்மாள் - வீணை.

மாலை 4-55 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7 45 'முற்றுகை' - நாடகம், 8-00 உள்ளத்தில் ஒரு கோயில் - இசைநாடகம், 9-15 நல்லுரை, 9-30 டெல்லி அஞ்சல், 9-50 இசைமாலை.

---

## ரப்பர் புனர்நடுகை

கொழும்பு, செவ்வாய்

1962-ம் ஆண்டு இறுதிக்குள் இரண்டு லட்சம் ஏக்கர் ரப்பர் காணியில் ரப்பர் புனர் நடுகைக்கு ரப்பர் கட்டுப்பாட்டிலாகா திட்டமிட்டுள்ளது.

ரப்பர் புனர்நடுகை உதவித் திட்டத்தின் இரண்டாவது கட்டம் இத்துடன் பூர்த்தியாகும்.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின் பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/118

# விஞ்ஞான ஆராய்ச்சி கூடத்தின் அவலநிலை

## உடனடி உதவியின்றேல் வேலைகள் பாதிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

இதுகாறும் அளித்துவந்தது போல் வருடாந்த உதவி நிதியாக 10 லட்சருபாய் உடனடியாக அரசாங்கம் கொடுக்காவிட்டால், இலங்கை விஞ்ஞான, தொழில் ஆராய்ச்சிக் கூடம், இவ்வருட முடிவுக்குள்ளேயே வேலைகளை நிறுத்தும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

கடந்த இரண்டு வருடகாலமாக எந்தவிதமான நிதியுதவியும் அளிக்கப்படாததால் தன்னிடம் இருந்ததைக் கொண்டு இதுகாறும் இவ்வாராய்ச்சிகளை சமாளித்தது. மேலும் சில மாதங்கட்கு போதிய அளவு நிதிதான் இருக்கிறது.

1954-ம் ஆண்டு அகில உலக வங்கித் தூதுகோஷ்டியின் யோசனையின் கீழ் 1955-ம் வருடம் பாராளுமன்றச் சட்டத்தின்படி இது நிறுவப்பட்டது. இதைக் கொண்டு நடத்த சுமார் 10 லட்சம் ருபாய் ஒவ்வொரு வருடமும் தேவைப்படுகிறது என்றும் நாட்டின் தொழில் முறைக்குப் பெரிதும் உதவியாயுள்ள இவ்வாராய்ச்சி கூடத்தை மூடிவிடுவது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்காது என்றும், ஆராய்ச்சிக்கூட அதிபர் டாகடர் ஏ. சுந்தரலிங்கம் அறிவித்தார். மேலும் இதைப்பற்றிப் பேசி நிதி உதவி பெறுவதற்கு தொழில், கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்காவைக் காண இருப்பதாகக் கூறினர்.

---

## பிரதமர் நேரு அக்டோபரில் மதுரை வருவார்

மதுரை, ஜூன் 27

வருகிற அக்டோபர் மாதம் பிரதம மந்திரி நேரு மதுரை வருகிறார். அப்போது அவருக்கு ஒரு வரவேற்புஅளிக்க மதுரை நகரசபை முடிவுசெய்துள்ளது.

---

## மார்க்கெட் விலை வாசிகள்

### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், திங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 105 - 50 |
| நகைப்பவுன் புதிது | 98 - 00 |
| " பழையது | 96 - 00 |
| தங்கப்பவுன் | 102 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

### காய் கறி

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னுங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசனிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமானநெய்போத்தல் | | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0 - 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0 - 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் போத்தல் | | 0 - 80 |
| என் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) | ரு. | 1 - 47 |

### கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்). | 1 - 23 |
| ஸயாம் மிளகாய் | 1 - 04 |
| சின்னச் சீரகம் | 0 - 97 |
| மஞ்சள் | 0 - 58 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ருத்தல் | 0 - 35 |

முருங்கைக்காய் 1க்கு - 40 சதம். மிளகு 1 ருத்தல் ரு. 3 - 22. (கட்டுப்பாட்டுவிலை இல்லை)

# 55 வயது கட்டாய ஓய்வுத் திட்டம்

## அட்டர்ணிஜெனரலிடம் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஊழியர்கள்கட்டாயமாக வேலையிலிருந்து இளைப்பாறவேண்டும். என்னும் அரசாங்க அறிவித்தல், அரசாங்க சேவைக் கமிஷனுக்கு திகைப்பைக் கொடுத்துள்ளது.

55 வது வயதின் ஆரம்பத்திலோ அல்லது இறுதியிலோ ஊழியர் இளைப்பாறவேண்டும் என்பது பற்றித் தீர்மானிப்பது அரசாங்கசேவைக் கமிஷனுக்குச் சிரமமாக உள்ளது.

ஐம்பத்தைந்து வயது நிறைவதற்கு முன்னரே ஊழியர் இளைப்பாறவேண்டும் என்றால் பென்ஷன் விதிகளை மாற்றி அமைக்க வேண்டியிருக்கும். ஆகவே, கமிஷன் இதைப்பற்றிய தீர்மானத்தை அட்டர்ணி ஜெனரலிடம் ஒப்படைத்துள்ளது. அட்டர்ணி ஜெனரலின் முடிவு இரண்டு மூன்று தினங்களில் வெளியாகும். திறைசேரியின் அறிக்கையொன்றின்படி, அட்டர்ணி ஜெனரலின் இதுபற்றியசுற்றறிக்கை ஒன்று இவ்வார இறுதியில் எல்லா இலாகாக்களுக்கும் அனுப்பப்படும்.

இத்திட்டம் அமுலுக்கு வந்தால் 30 சிவில் சேவையாளர்களும் 23 கணக்காளர்களும் ஆடிட்டர் ஜெனரல் தவிர்ந்த அந்த இலாகாவைச் சார்ந்த 28 மேலதிகாரிகளும், ஆடிட்டர் ஜெனரலுடைய உதவியினரும் கண்டிப்பாக வேலையிலிருந்து இளைப்பாறவேண்டும்.

சம்பளக்கமிஷன், அரசாங்க சேவையாளர்களது இளைப்பாறும் வயது 60 ஆக இருக்க வேண்டும் என்றும், அதை 62 வரை உயர்த்தும் உரிமையை அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம் என்றும் சிபார்சு செய்துள்ளது.

### கல்வி இலாகாவைப் பாதிக்கும்

55 வயது கட்டாய ஓய்வுத் திட்டம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டால் கல்வி இலாகாவில் உயர்தர உத்தியோகத்தர் பலர் ஓய்வுபெற்றேயாக வேண்டி நேரிடும்.

இத்திட்டத்தின்கீழ் கல்வி டைரக்டர் திரு. எஸ். எவ். டி' சில்வா, உதவி கல்வி டைரக்டர் திரு. ஏ. வீரசிங்க, உதவி டைரக்டர்கள் திரு. டி. ஜே. ராஜபத்திரான, திரு. ஜே. விக்கிரமசிங்கா, திரு. டி. ஏ: விக்கிரமசிங்கா, பாடசாலை பிரதம இன்ஸ்பெக்டர் திரு. எப். ஏ. சி. டி' சில்வா, கல்வியதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம், கல்வி அதிகாரி திரு. எம். டீ. தர்மதாசா, கல்வி அமைச்சின் உதவிக்காரியதரிசி திரு. கே. ரத்தினபாலா ஆகியோர் ஓய்வு பெறுவர்.

---

## புற்றுநோய்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் அதிசயமான ஆராய்ச்சி முடிவுகள் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளன. புற்றுநோய் ஏற்பட்டுள்ளவர்களில் பெரும்பாலோர்க்கு ரத்த ஓட்டத்திலேயே புற்றுநோய் கட்டி ஏற்படும் கிருமிகள் இருக்கின்றன என்பதே இக்கண்டுபிடிப்பாகும். ஆகவே புற்றுநோய் உடலில் எங்கு வேண்டுமானாலும் ஏற்படலாம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## புளிக்கு உத்தரவாதவிலை நிர்ணயிக்க தீர்மானம்

கொழும்பு, செவ்வாய்

புளி உற்பத்தியைப் பெருக்குவதற்காக புளிக்கு உத்தரவாதவிலை நிர்ணயிக்க வேண்டுமென, தற்காலிக விவசாயகாணி நில நீர்ப்பாசன மந்திரி தீர்மானித்துள்ளார்.

இதன்படி ஒருஅந்தர் புளியின் விலை ரு. 23.88ஆக இருக்கும்.

வடக்கு மாகாணங்களைச்சேர்ந்த உணவு உற்பத்தி ஓவர்சியர்கள்விவசாய சேவைக் கமிஷனரின் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் புளி உற்பத்தியாளர்களிடமிருந்து புளியை வாங்க உதவுவார்கள். இப் பகுதிகளிலுள்ள மகில சமிதிகளையும் இவ் விஷயத்தில் தமக்கு உதவுமாறு அமைச்சு அறிவித்துள்ளது.

---

## ராஷ்டிரபதி தென்னாட்டில் 3 வாரம் இருப்பார்

ஹைதராபாத், ஜூன் 27

அடுத்தமாதம் 20ம் திகதி ஜனாதிபதி ராஜேந்திரபிரஸாத் தென்னாடுவந்து, ஹைதராபாத்தில் 3 வாரம் தங்குவார். கேரளத்திற்கும் அவர் விஜயம் செய்வார்.

---

## கல்லோயா

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மரமொன்றின்கீழ் வீண் நேரம் கழித்தபடியால் இருபது வேலையாட்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். லொறியை நிற்பாட்டிவிட்டுத் தேநீர் அருந்திய ஒருவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

தற்காலிக வேலைத் தடை உத்தரவுகள் வழங்கப்பட்டதாக நிரந்தர நிர்வாகஸ்தர் தெரிவித்துள்ளார்.

கல்லோயா இடதுகரை நிர்வாக வேலைகளைக் கண்காணிப்பதற்கென அம்பாரையில் ஒரு கச்சேரி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

---

## ஜயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை தன் பொறுப்பில் எடுக்கச் சட்டம்செய்ய இருப்பதாயும், பின்னர் எழுத்து சுதந்திரம் அதிகமிராதென்றும், பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்தால், இலக்கியப் பணிசெய்ய அதிகவாய்ப்பிருக்குமென்று அவர் மதிப்பதாகவும் அறிந்தேன். இது எப்படியாயினும் திறமைமிக்க அந்த இளம் ஆசிரியரின் பேனா, மேன்மேலும் பணிசெய்ய வாழ்த்துகிறேன்.

---

## ரயில் நேரம்

| யாழ்ப்பாணம் | | கோட்டை |
|---|---|---|
| காலை 7-30 | — | மாலை 8 00 |
| *பி. ப. 2-20 | — | இரவு 10-05 |
| காலை 5-45 | — | காலை 5-15 |
| **கோட்டை** | | **யாழ்ப்பாணம்** |
| *காலை 6-00 | — | பி. ப. 1-30 |
| காலை 6-45 | — | மாலை 5-55 |
| இரவு 8-35 | — | காலை 6-55 |


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கும்பனித்தெரு) வெம்பிளி (கண்டி)

★ பதியே நிதியென்று பண்போடு வாழும் கட்டிய மனைவி கலா இருக்க, கண்ட பெண்களைக் காதலித்த பட்டணத்துச் சீமானின் பகட்டு வாழ்க்கை பலனளித்ததா...?
★ கள்ளமறியாது துள்ளித் திரிந்த கலாவை நோக்கி விதி எள்ளி நகையாடியது...
★ கணவனே கதியென்று கடைப்பிடித்த கலா என்ன ஆனாள்...?
★ இருமனம் கலந்த திருமணம் முடிந்ததா...?

— பார்த்துப் பதில் காணுங்கள் —




பிரேம் நஸீர், ராகினி, வீரப்பா, எம். என். ராஜம், வி. ஆர். ராஜகோபால் நடித்த
இருமனம் கலந்தால் திருமணம்
பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எஸ். ஸி. கிருஷ்ணன், ராகவன், ஜமுனா ராணி.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்
ஜெமினி கணேசன் நடித்த
மகேஸ்வரி

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்
எஸ். எஸ். இராஜேந்திரன் - பண்டரிபாய் நடித்த
குலதெய்வம்

Sons and Lovers
(Adults only)
சன்ஸ் அன்ட் லவர்ஸ்
(வயது வந்தவர்களுக்குமட்டும்)
பிற்பகல் 2, 3-45 சனி, ஞாயிறு காலை 10-30


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.